Registered as a NewsPaper

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-10

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஆனி -30 15-07-2003 செவ்வாய்க்கிழமை ஓசை 147


உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்.
கணேசா நகையகம்
194,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
123,பஜார் வீதி, வவுனியா.

# வடபோர்முனைத் தளபதி தீபனைச் சந்தித்து

# கண்காணிப்புக்குழுத்தலைவர் ரெலவ்சன்பேச்சு!

## வடபோர்முனையின் பல இடங்களைப் பார்வையிட்டனர்

(அலுவலக செய்தியாளர்)

**போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ரெலவ்சன் விடுதலைப் புலிகளின் வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் அவர்களை நேற்று மாலை சந்தித்து உரையாடியுள்ளதுடன் வடபோர் முனைப்பகுதியின் பல இடங்களையும் சென்று பார்வையிட்டுள்ளார்.**

நேற்று தரைவழியாக கிளி நொச்சி வந்த இவர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்தார். அதன்பின் கேணல் தீபன் அவர்களைச் சந்தித்தார்.இச்சந்திப்பின்போது கேணல் தீபன் சிறிலங்கா படையினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைவாக செயற்படாது சூனியப்பிரதேசம் என அறிவிக்கப்பட்டுள்ள இருதரப்பு நடமாட்டமும் அற்ற பகுதிகளுக்குள் தமது காப்பரண்களை முன் நகர்த்தியுள்ளமை தொடர்பாக சுட்டிக் காட்டினார்.

(10ம்பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தைகள் முற்றுப்பெறவில்லை; முக்கிய விடயங்கள் விவாதிக்கப்பட்டன!

### தமிழ்ச்செல்வனுடனான சந்திப்புக் குறித்து ரெலவ்சன்

(அலுவலக செய்தியாளர்)

"நேற்றைய பேச்சுவார்த்தை முற்றுப் பெறவில்லை. முக்கிய பல விடயங்கள் விவாதிக்கப்பட்டு வருகின்றது. தற்போது இது தவிர எதையும் கூற முடியாது" என நேற்று கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புத் தலைவர் ரெலவ்சன் தெரிவித்தார்.



அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ரெலவ்சன் மேலும் தெரிவிக்கையில்:

எனது கிளிநொச்சிக்கான விஜயத்தை வவுனியாவிலிருந்து ஆரம்பித்தேன். நான் பயணம் செய்தபோது ஏ-9 பாதையில் நடைபெற்று வரும் சிரமைப்புப் பணிகள் குறித்து நான் திருப்தி கொண்டிருக்கிறேன். இரு நாட்களில் தளபதிகளான சூசை,தீபன் உட்பட பலதளபதிகளோடு முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்த இருக்கிறேன். அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல் வனோடு நடத்திய சந்திப்பின் மூலம் தறபோதைய நிலமைகள் குறித்து தெரியவந்துள்ளது. நேற்றைய பேச்சு வார்த்தை முற்றுப் பெறவில்லை. முக்கிய பல

(10ம்பக்கம் பார்க்க)

## முதல் தளபதி லெப். சீலனின் நினைவுநாள் இன்று அல்லாரையில் அனுஷ்டிப்பு

தமிழர் சேனையின் முதல் தாக்குதல் தளபதி லெப்.சீலனின் 20ஆம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும். இதனை முன்னிட்டு இன்று கொடிகாமம் அல்லாரையிலுள்ள அவரது நினைவுத்தூபிக்கு அருகாமையில் நினைவு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அப்பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் செய்துள்ளன. இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

### சர்வதேச கடற்பரப்பில் வீரச்சாவடைந்த

## பன்னிரண்டு மாவீரர்கள் நினைவாக இன்று யாழ்.இல் வீரவணக்கக் கூட்டங்கள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் வணிகக் கப்பல் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்ட சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களை நினைவு கூரும் முகமாக யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் இன்று வீரவணக்கக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளது. யாழ். நல்லூர் கோட்டத்தில் குருநகர் சனசமூக நிலையத்தில் இன்று பிற்பகல் 5. 00 மணிக்கு வீரவணக்கக் கூட்டம் ஆரம்பமாகி 12 மாவீரர்களுக்கும் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற

(10ம்பக்கம் பார்க்க)

## லெப்.கேணல் செந்தமிழுக்கு நினைவுக்கல் நாட்டல்

சர்வதேசக் கடற்பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல் தாக்கியழிக்கப்பட்டபோது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப் கேணல் செந்தமிழ் அல்லது வீரமணி என்று அழைக்கப்படும் சின்னராசா சிவரூபனின் நினைவுக்கல் நாளை உடுத்துறை மாவீரர் துயிலு மில்லத்தில் திரைநீக்கம் செய்துவைக்கப்படவுள்ளது. இம்மாவீரரின் திருவுருவப்படம் இன்று மாலை வெற்றிலைக்கேணி முள்ளியான் எனும் முகவரியிலுள்ள அவரது சொந்த வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இவருடன் வீரச்சாவடைந்த 12 மாவீரர்களுக்கும்

(10ம்பக்கம் பார்க்க)

## அரசியல் நிலவரம் குறித்து இந்.விற்கு பொ.ஐ.மு.விளக்குமாம்

(கொழும்பு)

சிறிலங்காவின் அரசியல் நிலவரம் குறித்து இந்தியாவிற்கு விளக்கிக் கூறுவதற்கு பொ.ஐ. முன்னணி தீர்மானித்துள்ளது. தற்போதைய அரசியல் நிலைமை, அதிகரித்து வரும் குற்றச்செயல்கள், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான கெடுபிடிகள் தொடர்பாக இந்திய அரசாங்கத்திற்கு தெரியப்படுத்த பொ. ஐ. முன்னணி எண்ணியுள்ளது.

இந்தியத் தலைவர்களை நேரடியாகச் சந்தித்து இவற்றை விளக்கும்

(10ம்பக்கம் பார்க்க)

## மட்டு. கல்முனைப் பகுதியில் 6 போராளிகள் பொலிசாரால் கைது

மட்டக்களப்புக் கல்முனைப் பகுதியில் ஆறு விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

நேற்று இரவு 10 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றை சிறிலங்காப் பொலிசாரும் இராணுவத்தினரும் கல்முனைப் பகுதியில் தடுத்து நிறுத்தினார்கள். இவ்வாகனத்தில் பயணம் செய்த தமிழீழ விடுதலைப் புலிகள் அனைவரும் இவ்விடத்திலிருந்து எட்டு மைல் தொலைவிலுள்ள காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு இவர்கள் பயணம் செய்த வாகனமும் காத்தான்குடிப் பொலிஸ்

(10ம்பக்கம் பார்க்க)

## நோர்வே விசேட தூதுவர் வெஸ்பேர்க் சிலதினங்களில் வன்னி வருவார்

நோர்வேயின் சிறப்புத்தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் அடுத்த சில தினங்களில் வன்னிக்கு வருகைதரவுள்ளார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான சிறிலங்கா அரசின் திட்டவரைபுடன் இவர் வன்னிக்கு வருகை தரவுள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர் இன்று வன்னிக்கு வருகைதர இருந்த போதும் அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக திட்ட வரைபு வழங்கப்படாததனாலேயே அவர் வருகைதரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மாணவர் பேரவை உறுப்பினர்களை தாக்க படையினர் முயற்சி

வடமராட்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர்கள் வழிமறித்து சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தாக்கமுயன்றுள்ளனர்.நேற்று கோப்பாய் இராசவீதி வழியாக வானில் சென்று கொண்டிருந்த போது முன்னே மது போதையில் உந்துருளியில் சமநிலை குழம்பிய நிலையில் பயணித்துக் கொண்டிருந்த நபரை விலத்த முற்பட்ட போது சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவால் மறிக்கப்பட்டனர்.

எந்தவிதமான விபத்தும் ஏற்படாத போதும் கடுமையான வார்த்தைகளால் அவர்களை ஏசியதோடு தாக்கவும் முயற்சித்தனர். ஆயினும் அவர்கள் விலகிக்கொள்ளவே

(10ம்பக்கம் பார்க்க)

### வடக்கு, கிழக்கைப் பிரிக்கக்கோரி

## திருமலையில் சிங்கள பேரினவாத அமைப்பு ஒரு இலட்சம் கையொப்பம் சேகரிக்க முயற்சி

திருமலை மாவட்டத்தில் நேற்றுக் காலை சிங்கள சம்விதான என்ற சிங்கள பௌத்த அமைப்பு ஒன்று வடக்கு-கிழக்கை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று ஒரு லட்சம் பேரினது கையொப்பத்தினைப் பெறுவதற்கு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

நேற்றுக் காலை திருமலை மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியடியில் நடந்த நிகழ்வொன்றில் இந்த அமைப்பின் தலைவர் பிஜத்திர தேரர் முதல் முதல் கையொப்பமிட்டு இதனை ஆரம்பித்து வைத்துள்ளார்.வடக்கையும் கிழக்கையும் இணைக்க வேண்டாம். வடக்குக்கு ஒரு மாகாண சபையும் கிழக்குக்கு ஒரு மாகாண சபையுமாக தனித்தனி மாகாண சபைகள் அமைக்கப்படவேண்டும் என்று ஒரு லட்சம் பேரது கையொப்பம் பெற்று மகஜர் ஒன்று சமர்ப்பிப்பதே இந்தச் சங்கத்தினது நோக்கமாகும்.இந்த மகஜரை சனாதிபதிக்கும் பிரத

(10ம்பக்கம் பார்க்க)

## - மேஜர் முரளி உதைபந்தாட்ட இறுதிப்போட்டி -

# 15 வயது பிரிவில் சுவிஸ் அணியும் 17 வயது பிரிவில் திருமலை அணியும் வெற்றி

சுவிஸ் தமிழர்களின் தாயக சுற்றுலா உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் சுவிஸ் அணியும் 17 வயதுப் பிரிவில் திருமலை அணியும் இறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன.

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக நடாத்தப்படும் இவ் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் 5ம் நாள் நிகழ்வுகள் நேற்று பிற் பகல் 4 மணியளவில்





கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. தேசியக் கொடியை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைத்தார். மேஜர் முரளியின் உருவப் படத்திற்கு யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றி வைத்தார். மலர் மாலையினை கடற்புலிகள் மகளிர் அமைப்பைச் சேர்ந்த கங்கா அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து 15 வயதுப் போட்டி ஆரம்பமானது. இதில் சுவிஸ் அணி 8-0 என்ற கோல் கணக்கில் யாழ். அணியை வென்றது. சநிசாத் 4 கோல்களையும், தர்சன் 2 கோல்களையும், நவஜீவன், பிரவீன் தலா ஒரு கோல்களையும் போட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற 17 வயது பிரிவினருக்கான போட்டி யில் திருமலை அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்ட முடிவில் இரு அணிகளும் தலா இரு கோல்கள் போட்டிருந்தன. சுவிஸ் அணியின் சார்பில் திவாகரன் சுதர் சன் ஆகியோரும் திருமலை அணியின் சார்பில் பிரபா ரஜீவ், சிவச்சந்திரகுமார் ஆகியோரும் கோல் போட்டனர். இதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட இரண்டாவது மேலதிக நேரத்தில் திருமலை வீரர் K.D.J. மதுசங்கர் "தங்கக்கோல்" மூலம் தமது அணியை வெற்றி பெறவைத்தார்.

இப்போட்டிகளுக்கு மத்தி யஸ்தர்களாக ஜனாப் பர்சூக், ஜனாப் இப்றாஹீம், ஸ்கந்தகுமார், சிவநேசன், F.சான்டஸ், கணேசலிங்கம், க.புவனேந்திரராசா ஆகியோர் கடமையாற்றினர்.

இன்று பிற்பகல் நடைபெறும் இறுதிப் போட்டிகளில் 13 வய துப் பிரிவில் அம்பாறை-மட்டு அணிகளும், 19. வயதுப் பிரிவில் மட்டு-மன்னார் அணி களும் மோதவுள்ளன.

# கணினிப் பயிற்சி நெறி நாளை ஆரம்பமாகிறது

புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சின் அனுசரணையுடன் மாவட்டச் செயலகத்தால் நடாத்தப்பட்டு வரும் கணினிப் பயிற்சி நெறிக்கான இரண்டாவது தொகுதி பயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற நேர்மூகப் பரீட்சைக்கு சமுகமளித்த அனைவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி நெறி நாளை முதல் நடைபெறவுள்ளது.

எனவே, குறிப்பிட்டவர்கள் நாளை செலயகத்திற்குச் சமுகமளித்து பயிற்சிநெறியினைத் தொடருமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

## 2001 பொதுத் தேர்தல்

# பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்குமாறு சனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்டஈடு வழங்குமாறு சிறிலங்கா சனாதிபதி மீண்டும் அமைச்சரவையில் கோரிக்கை விடுத்துள்ளார். தேர்தல் காலத்தில் கண்டி உட்பட பல இடங்களில் இடம்பெற்ற வன்செயல்களில் பலர் கொல்லப்பட்டிருந்தார்கள். இவர்களின் குடும்பத்திற்கும் பாதிக்கப்பட்ட ஏனையோருக்கும் காணிகளும், நஷ்டஈடும் வழங்கப்பட வேண்டும். கடந்த மாதம் சுட்டுக் கொல்லப்பட்ட மாகாண சபை உறுப்பினர் சுனில் மெண்டிஸின் குடும்பத்திற்கு பத்து இலட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்க வேண்டும் என்றும் சனாதிபதி கேட்டுள்ளார்.

# பாராளு. உறுப்பினருக்கான ஒழுக்கக் கோவை தயாரிப்பு!

## எதிர்க்கட்சியுடன் ஆளுங்கட்சி பேசும்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கான ஒழுக்கக் கோவையைத் தயாரிப்பது குறித்து சிறிலங்கா அரசாங்கம் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல்வாதிகளும் குற்றச் செயல்கள் மற்றும் முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுவருகிறது. இவ்வாறானவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கும் வகையில் இந்த ஒழுக்கக் கோவையைத் தயாரிப்பது குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. ஐ.தே.கட்சி தமது உறுப்பினர்களை வழிநடத்துவதற்கான ஒழுக்கக் கோவையைத் தயாரிக்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# வீரவணக்கம்



மேஜர் வீரநாதன்
தியாகராசா தயாநிதி



லெப்.கேணல் செந்தமிழ்/வீரமணி
சின்னராசா சிவரூபன்





லெப்.கேணல் அன்புக்குமரன்
வல்லிபுரம் சிவகுமார்




மேஜர் வள்ளுவன்
துரை சைலேஸ்வரன்



மேஜர் கன்னியநாடன்
பொன்னம்பலம் கிருபாகரன்



லெப்.கேணல் கஜேந்திரன்
நல்லையாகிருஸ்ணன் கமில்தினேஸ்



லெப்.கேணல் கதிர்
செல்வரட்ணம் சசீந்திரன்



மேஜர் நிரமலன்
ரணராஜா ரகுநாத்

## கடலில் கலந்த காவிய நாயகர்களே...!



மேஜர் மணியரசன்
முத்துலிங்கம் லவக்குமார்



மேஜர் நிமால்/நிமல்
தங்கராசா செல்வக்குமார்

தமிழீழமண்ணுக்காய்
தணியாத மோகமுடன்
தலைவனின் வழிநடந்த
தயாள குண செம்மல்களே!

சுற்றுவனும் உமைக்கண்டு
அஞ்சுகின்ற போதினிலே
கொடியவரின் சதிவலையில்
ஏன் விழுந்து போனீர்கள்!

கோடி இன்னல் நேரிடினும்
கொண்ட குறி தவறாது
குமுறுகின்ற கடலோடிக்
குதித்தெழுந்த வீரர்களே!

கடலலையில் காவியமாய்
கதை சமைத்தீர் காலமெல்லாம்
கால் பதிப்போம் உங்களது
தீரமிகு பயணத்தில்....



சப்டன் செழியன்/அன்புவெற்றி
சொக்கலிங்கம் ஜெகன்



நாட்டுப்பற்றாளர்
மோகன்

ஓட்டுசுட்டான்
பிரதேச வாழ்மக்கள்.


[சி-8230]

## - அயோத்திப் பிரச்சினையில் -

# கருத்தொருமைப்பாடின்றி நாடாளுமன்றத்தில் சட்டமியற்றப்படுவதை ஆதரியோம்

### - சமதாக் கட்சித் தலைவர் ஜோர்ஜ் பர்னாண்டஸ்

**அயோத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கருத்து ஒற்றுமை இல்லாமல் நாடாளுமன்றத்தின் மூலம் சட்டம் இயற்ற முயலும் பாரதிய ஜனதாக் கட்சியின் எந்த நடவடிக்கையையும் சமதாக் கட்சி எதிர்க்கும் என அக்கட்சித் தலைவரும், பாதுகாப்பு அமைச்சருமான ஜோர்ஜ் பர்னாண்டஸ் கூறியுள்ளார்.**



ஜோர்ஜ் பர்னாண்டஸ்

புது டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மதசார்பற்ற கொள்கைகளைத் தமது கட்சி விட்டுக் கொடுக்காது என்று கூறியுள்ளார்.

அயோத்திப் பிரச்சினை குறித்த கட்சியின் தீர்மானம் தேசியக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் என்று பர்னாண்டஸ் கூறியுள்ளார்.

இதேபோல் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றுவது சாத்தியமில்லை என துணைப் பிரதமர் அத்வானியும் கூறியுள்ளார்.

நக்பூரில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் பேசிய அவர் நாடாளுமன்றத்தில் பாரதிய ஜனதாவுக்குப் பெரும்பான்மை பலம் இல்லாது இருப்பதால் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு இல்லாமல் இதற்கான சட்டம் இயற்ற இயலாது என்று கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் பாரதிய ஜனதாக் கட்சிக்குப் பெரும் பான்மை பலம் இருந்து சட்டம் இயற்றினாலும் உத்தரப் பிரதேச அரசின் ஆதரவு இல்லாமல் அதைச் செயற்படுத்த முடியாது என்றும் அத்வானி கூறியுள்ளார்.

இதேவேளை, சமதாக் கட்சியின் தேசிய தலைவராக மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பர்னாண்டஸ் மீண்டும் போட்டியின்றித் தெரிவாகியுள்ளார்.

சமதாக் கட்சித் தலைவராக இருக்கும் ஜோர்ஜ் பர்னாண்டஸின் பதவிக்காலம் முடிவடைந்தமையினால் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கட்சியின் தேசியக் குழுக் கூட்டம் டில்லியில் நேற்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கட்சியின் தேசியத் தலைவராக மீண்டும் ஜோர்ஜ் பர்னாண்டஸ் தெரிவாகியுள்ளார்.




அமெரிக்க ஆதரவுடன் ஈராக்கில் புதிதாக அமைக்கப்பட்ட ஆட்சிச் சபை உறுப்பினர்கள் ஈராக் நாட்டின் பெரிய வரைபடத்தின் கீழ் அமர்ந்து செய்தியாளர் மாநாடு நடத்துகின்றனர்.

## பஸ் விபத்தில் 16 பேர் பலி

(சிறிநகர்)

ஜம்மு காஷ்மீரில் இடம்பெற்ற பஸ் விபத்தொன்றில் 16பேர் உயிரிழந்ததுடன் 28பேர் காயமடைந்துள்ளனர்.

கேடா மாவட்டத்தின் பிரேம் நகரில் சென்று கொண்டிருந்த பஸ் பள்ளத்தாக்கில் உருண்டு வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. காயமடைந்தோரில் பலரின நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழகத்தில் தி.மு.க.வை தவிர்ந்து புதிய கூட்டணிக்கு பா.ஜ.க. முடிவு

தமிழகத்தில் தி.மு.க அல்லாத புதிய கூட்டணியை அமைக்க பாரதிய ஜனதா கட்சி முடிவு செய்துள்ளது. பாரதீய ஜனதா கட்சியின் திருச்சி மாவட்டத்தின் செயற்குழுக் கூட்டத்தில், கட்சியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

தமிழக பாரதீய ஜனதாவுடன் உறவு கிடையாது என தி.மு.க தலைவர் கருணாநிதி கூறிவிட்டதால் அக்கட்சி அல்லாத புதிய கட்சிகளுடன் புதிய கூட்டணியை அமைக்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்காக பாரதீய ஜனதா கட்சித் தொண்டர்கள் இப்போதே பாடுபட வேண்டும் எனவும் கூறப்படுகிறது.

## தமிழக ஊழியர் வேலை நிறுத்தம் குறித்து உயர்நீதிமன்றத் தீர்ப்பு ஏமாற்றமளிக்கிறது

### அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கண்டனம்

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தமிழக அரச ஊழியர்கள், மற்றும் ஆசிரியர்களின் நிலை குறித்து சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஏமாற்றம் அளிப்பதாக நேற்றுச் சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டம் கூறியுள்ளது.

வேலைநிறுத்தம் செய்த ஊழியர்கள் விடயத்தில் மாநில அரசு எடுத்த நடவடிக்கைகள் ஜனநாயக விரோதமானவை என்றும் தொழிலாளர் நலனுக்கு எதிரானவை என்றும் கூட்டம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட், மார்ஸிய கம்யூனிஸ்ட்,திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் போன்ற கட்சிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளன.

புதிய தமிழகக் கட்சி இதில் கலந்து கொள்ளவில்லை என்றாலும் ஆதரவு தெரிவித்துள்ளது.

இக்கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி மீண்டும் கூடி இறுதி முடிவு எடுக்கவுள்ளன.

பொது மக்கள் இந்த இயக்கத்திற்கு ஆதரவு தர வேண்டுமென்று அனைத்துக் கட்சிக் கூட்டம் கேட்டுக் கொண்டுள்ளது.

## இந்தியா-பாக். பிரச்சினை தீர்க்கப்படாவிடின் கார்கில் யுத்தம் போன்று மீண்டும் ஏற்படலாம்

### - அமெரிக்க அமைப்பு எச்சரிக்கை

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நிலவும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படாது விட்டால் கார்கில் போன்ற ஓர் யுத்தம் மீண்டும் ஏற்படலாம் என்று அமெரிக்க அமைப்பொன்று எச்சரித்துள்ளது. அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்சில் இயங்கும் தீவிரவாத பாதுகாப்பு விவகாரங்கள் பற்றிய அமைப்பே இதனைத் தெரிவித்துள்ளது.

தற்போது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நல்லெண்ண சூழல் உருவாகும் வகையில் தோற்றங்கள் இருந்தாலும் இரு நாடுகளுக்கும் இடையில் உட்பூசல்கள் இருந்து வருவதாக அந்த அமைப்புக் கூறுகின்றது.

இதனால் தெற்காசியப் பிராந்தியத்தில் பதற்றம் நீடித்து வருகின்றது. தனது சொந்த நாட்டின் நலனைவிட காஷ்மீர் பிரச்சினைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பாகிஸ்தானின் அணுகுமுறையால் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் நீடித்துவரும் விவகாரங்களுக்கு துரித தீர்வு காணப்படவேண்டும் என அந்த அமைப்புக் கூறியுள்ளது.

இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டியதன் முக்கிய பொறுப்பு பாகிஸ்தானிடம் இருப்பதாக அந்த அமைப்பின் ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனேடிய பெண் பத்திரிகையாளர் தெஹ்ரானில் மர்ம மரணம்

கனடாவைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர் "ஜாக்ரா ஜஷெனி" ஈரான் தலைநகர் தெஹ்ரானில் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார்.

54 வயதான ஜாக்ரா ஜஷெனி பல பத்திரிகைகளுக்குச் செய்தி சேகரித்து வந்தவர். அத்துடன் புகைப்படங்கள் எடுப்பதிலும் திறமையானவர்.

அண்மையில் ஈரான் சென்ற இவர் தலைநகரில் அரசுக்கு எதிரான கலவரங்களில் ஈடுபட்டு, அடைக்கப்பட்ட சிறைச்சாலையருகே பல புகைப்படங்களை எடுத்துள்ளார்.

இந்நிலையில் தலையில் தாக்கப்பட்டு இவர் மரணமடைந்துள்ளார். வைத்தியசாலை அறிக்கை , தலையில் இரத்த நாளம் வெடித்தே மரணமடைந்துள்ளதாகக் கூறியுள்ளது.

இது குறித்துத் தகுந்த முறையில் விசாரணை நடத்துமாறு ஈரான் சனாதிபதி தனது அமைச்சர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஆனால், சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், இப்பெண்மணியின் சடலத்தைச் சொந்த ஊருக்கு அனுப்ப வேண்டும் என்றும் இவரது மகனும் சர்வதேசப் பத்திரிகையாளரும் வற்புறுத்தி வருகின்றார்கள்.



ஹொங்கொங்கில் பாராளுமன்றத் தேர்தலை நடத்திப் புதிய அரசியல் சீர்திருத்தத்தை மேற்கொள்ளுமாறு கோரி மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்கள்.

## அமெரிக்கப் படையினர் பயணித்த வாகனம் ஒன்றின் மீது தாக்குதல்

### இராணுவ வீரர் ஒருவர் படுகாயம்

(பாக்தாத்)

அமெரிக்க இராணுவ வீரர்கள் பயணம் செய்த வாகனம் ஒன்றின் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத் விமான நிலையத்தை நோக்கிய பாதையில் சென்று கொண்டிருந்த போதே எறிகணை கொண்டு இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இந்தச் சம்பவத்தில் ஏனைய வீரர்களும் காயமடைந்தார்களா என்பது சரியாகத் தெரியவில்லை.

கடந்த சனியன்று பாக்தாத்தில் நிகழ்ந்த வன்முறை ஈராக்கியர் இருவரைப் பலி கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தவேளை ஈராக்கில் அமெரிக்கப் படையினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலின் பின்னணியில் தாமே இருப்பதாக மற்றுமொரு குழு தெரிவித்துள்ளது.

இந்தக் குழு அல்-ஹைதா வலை அமைப்புடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

துபாயை மையமாகக் கொண்டு இயங்கும் அல்-அரேபியா என்ற தொலைக்காட்சியில் தமது முகத்தைக் காட்டாது பேசிய ஒருவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார். இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குச் சதாம் ஹுசைனின் விசுவாசிகள் பொறுப்பல்ல எனவும் எதிர் காலத்தில் இது போன்ற மேலும் பல தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# அமெரிக்காவை விட இஸ்ரேலிடம்

உண்மைகள் வெளியாகியுள்ளன. அதாவது கடற்படை அதிகாரிகள் இருவரினதும் அறிக்கையின்படி அந்த நைட் ஹஸ்வ் பயர் கன்ரோல் சிஸ்ரத்துடன் அமெரிக்க கடற்படை, விமானப்படை என்பன புதிய வகை புஷ் மாஸ்ரர்களை பயன்படுத்தியுள்ளதாகத்

# கொள்வனவு செய்வதில் சிறில. தளபதிக்கு நாட்டம்!

சிறிலங்கா கடற்படைக்கு இஸ்ரேலும் 7மில்லியன் டொலர் குறைந்த விலைக்கு அமெரிக்கா 15 பீரங்கிகளை கொடுக்க முன்வந்திருக்கும் நிலையில் 12.3மில். டொலருக்கு இஸ்ரேலிடம் இருந்து கொள்வனவு செய்ய கடற்படை தீர்மானித்திருக்கிறது. இதனைக் கடற்படைத் தளபதி தயாசந்தகிரி உறுதிப்படுத்தியுள்ளார். ஆரம்பத்திலிருந்தே கடற்படைக்கு இஸ்ரேலிய




கடற்படைத்தளபதி தயாசந்தகிரி

அமெரிக்கா வழங்க முன்வந்துள்ளது. எனவே இதிலிருந்து 7மில்லியன் டொலர் அதிகமாக இஸ்ரேல் விலை குறித்துள்ளது. இந்த சாதகமற்ற கொள்வனவு கடற்படை ஆலோசகர் ஒருவரின் வெறுப்புக்கு மத்தியிலும் கடற்படைத் தளபதி தயாசந்தகிரியினால் வற்புறுத்தப்பட்டுள்ளது. இதற்குக்காரணமாக மரபு ரீதியாக பல ஆண்டுகளுக்கு முன்பிருந்து இஸ்ரேலிடமே ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டதையும் கையாளும் முறைகளை அறிந்துள்ளதையும் கடற்படைத் தளபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இரு நாடுகளினதும் ஆயுதங்களுக்கான உதிரிப்பாகங்களும் வித்தியாசமானவை என்பதும் ஒரு தடையாகும் எனவும் கூறப்படுகிறது.

இருந்தபோதும் இந்த கொள்வனவு குறித்து அவர் முன்வைத்துள்ள விவாதம் (கருத்து) தீவிரமாக ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் தென்படுகிறது.

கடற்படைக்கு விரைவு தாக்குதல் கருவிகளை மதிப்பீடு செய்ய கடந்த ஆண்டு அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டபோது ரியர் அட்மிரல் வசந்தகரன்னாகொடவும், தர்மப்பிரியவும் மதிப்பிடப்பட்ட ஆயுதங்களுள்



கையின் படி அமெரிக்காவின் வெளிநாடுகளுக்கான இராணுவ தளபாட விற்பனைப் பட்டியலில் சிறிலங்காவும் சேர்த்துக்கொள்ளப் பட்டது. இதன்படி இரு அரசாங்கங்களுக்கும் இடையிலேயே ஆயுதக் கொள்வனவு மேற்

தெரிவித்துள்ளனர். மேலும் அதன் பெறுமதி (பீரங்கி மட்டும்) 170 ஆயிரம் அமெரிக்க டொலர் ஆகும். எனினும் இதே இனப் பீரங்கியை இஸ்ரேல் 640 ஆயிரம் டொலருக்கு வழங்கி யுள்ளது என குறிப்பிட்டுள்ளதுடன்

இதனையே கொள்வனவு செய்யவும் தயா சந்தகிரி உறுதியளித்துள்ளார்.

இது இப்படியிருக்க இவ் வருடம் மே, 11 ஆம் திகதி தயா சந்தகிரி தொலை நகல் செய்தி மூலம் குறிப்பிட்ட ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முடியாதுள்ளதாக அமெரிக்காவிடம் அறிவித்துள்ளார். இந்தச் செய்தியில் அவர் எம்.கே 46 ரக, புஷ் மாஸ்ரர் ரக பீரங்கிகள் தமது கடற்படைப் படகுகளில் பொருத்தமுடியா

# கடற்படைக்கு ஆயுதத் தளபாடக் கொள்வனவு

ஆயுதங்களே பெறப்படுவதாகவும் இஸ்ரேலிய பீரங்கிகள் விரைவாகப் பெறக்கூடியதாகவும் படகுகளில் இணைப்பதற்கும் செலுத்துவதற்கும் பாதுகாப்பானது எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் கடந்த வருடம் கடற்படையின் விரைவு தாக்குதல் கருவிகளை மதிப்பீடு செய்ய வந்த அமெரிக்கக் குழு 30 எம்.எம் புஷ் மாஸ்ரர் என்ற பீரங்கியை சிபார்சு செய்தது. இஸ்ரேல் அரசு எம்.கே.44ரக ஒற்றைக்குழல் புஷ்மாஸ்ரர் பீரங்கிகள் பதினைந்தை 12.3 மில்லியன் அமெ.டொலருக்கு விற்பனை செய்ய முன்வந்துள்ளது. இதனை 4.4 மில்லியன் டொலர்களுக்கு புஷ்மாஸ்ரர் பீரங்கியும் அடங்கும். இந்த விஜயம் கடற்படையின் வேண்டுகோளின்படி வாஷிங்டனிலுள்ள சர்வதேச நிகழ்ச்சித் திட்ட அலுவலகத்தின் இலங்கைத்தூதுவரின் அழைப்பினாலேயே மேற்கொள்ளப்பட்டது. இந்த பூர்வாங்க நடவடிக்கையும் 2002ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவினால் தூண்டிவிடப்பட்டதாகும். இது அவரது அமெரிக்க விஜயத்தின்போது புஷ்சுடன் நடந்த பேச்சுக்களில் தமது கடற்படை பலத்தை அதிகரிக்கும் தீர்மானத்தோடு எடுக்கப்பட்ட முடிவாக இருக்கலாம்.

இந்தச் சந்திப்பின் போது ரணில்-புஷ் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக் கொள்ளவோ, பேச்சுக்கள் நடத்தவோ முடிவு செய்யப்பட்டது.

இதனால் அமெரிக்காவுக்கு ஒரு நன்மை. தேவையான ஆயுதங்களை கோரும் போது அமெரிக்கா அதனை வழங்குவதுடன் மேலதிக ஆயுதங்களை விற்றுவிட அமெரிக்காவுக்கு வாய்ப்பாகும்.

இதன் அடிப்படையிலேயே அமெரிக்கத் தயாரிப்பு 30 மி.மீ புஷ் மாஸ்ரர் பீரங்கிகளும் நைட் ஹஸ்க் பயர் என்ற கனரக ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முன்வந்தது.

ஆயினும் தற்போது புதுவிதமான துள்ளதென கடற்படை கூறுவதாகத் தெரிவித்துள்ளார். இதனாலேயே தாம் இஸ்ரேல் பீரங்கிகளை வாங்கவேண்டி ஏற்பட்டுள்ளதாக தயா சந்தகிரி தெரிவித்துள்ளார். மற்றும் இஸ்ரேலிய பீரங்கி ஒன்றின் விலை 640 ஆயிரம் டொலராக இருக்க அமெரிக்கா 193 ஆயிரம் டொலராக விற்பனை செய்வதாகவும் காரணம் கூறியுள்ளார். இது தொடர்பாக பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தம்மிடம் ஒன்றும் வினவ வேண்டாம் எனவும் என்னிடம் பதில் இல்லை எனவும் கூறியுள்ளார்.

மொழியாக்கம்
*வடிவேல்*
(சண்டே லீடரில் இருந்து)

# மன்னார் மாவட்டத்தில் த.பு.கழகத்தின் துரித புனர்வாழ்வு அபிவிருத்திப்பணி

(அலுவலக செய்தியாளர்)

கடந்த கால போர் நடவடிக்கைகளால் பெரும் அழிவுகளுக்குள்ளான மன்னார் மாவட்ட மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் நோக்கில் மன்னார் மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் துரித புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் வடக்குக் கிழக்கு சமூக மீள் அமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 133 வீடுகளும் 133 மலசல கூடங்களும் 12.388000 ரூபா செலவில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்தகைய புனரமைப்பு பணிக்காக மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் மக்களின் நலன்கருதி மக்கள் செறிவாக வசிக்கும் பகுதிகளில் பஸ் தரிப்பு நிலையங்களை அமைக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது. இதன் முதல் கட்டமாக மன்னார் பகுதியில் நான்கு புதிய பஸ் தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள பகுதிகளை இனம்கண்டு அப்பகுதி மக்களை முன்னேற்றும் நோக்குடன் இத்தகைய பல்வேறு புதிய கட்டுமானப் பணிகளை மன்னார் மாவட்ட தமிழர் புனர் வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (லோ)

# மட்டு. கடற்றொழிலாளர் கூ.சங்கம் பரணிதரன் கொலைக்குக் கண்டனம்

(மட்டக்களப்பு)

பரணிதரன் கொலை செய்யப்பட்டதற்கு மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டசெயல் என்றும் இதற்கான முழுப் பொறுப்பையும் சிறிலங்காப் படையினர் அல்லது அவர்களோடு இணைந்து செயற்படும் தமிழ் ஆயுதக்குழுக்களே பொறுப்பேற்க வேண்டும் என்றும் தற்போதைய சமாதானச் சூழலைச் சீர்குலைக்கும் வகையில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன இச்சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தவேண்டும் என்றும் ஒன்றியம் கேட்டுள்ளது.

பரணிதரன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக புளொட் உறுப்பினர் ஒருவர் பொலிசாரால் தேடப்பட்டு வருவது தெரிந்ததே.

# 900 போத்தல் கசிப்பை கடத்திச் சென்றவர் கைது

போயா தினமான நேற்று முன்தினம் கார் ஒன்றில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான கசிப்பை எடுத்துச் சென்ற ஒருவரை அளவ்வ பொலிசார் கைது செய்துள்ளனர். சந்தேக நபரான கார் சாரதி வாரத்திற்கு இரண்டு தடவைகள் இதே காரில் கண்டிக்குக் கசிப்புக் கடத்தி வந்துள்ளதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சோதனைக்குட்படுத்தப்பட்ட காரில் 20 பொலித்தீன் பைகளில் 900 போத்தல் கசிப்பு தயாரிக்கப் பயன்படும் எப்பிரிட் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# இருகடற்படை அதிகாரிகளின் பதவி உயர்வு; கடற்படைத்தலைமைப் பீடத்தில் சர்ச்சை

சிறிலங்கா கடற்படைத் தலைமைப்பீடத்தில் மீண்டும் சர்ச்சைகள் தலைதூக்கியுள்ளன. கடந்த வருடம் கடற்படைத் தளபதிக்கு எதிராக நீதிமன்றம் சென்ற இரு சிரேஷ்ட கொமடோர் தர அதிகாரிகளின் பதவிக்காலம் வெகுவிரைவில் முடிவுக்கு வரவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடற்படைப் பொறியியல் பிரிவு இயக்குனரான கொமடோர் டி.சி.ஜ. காரியவாசம், விநியோகப் பகுதி இயக்குனர் ஜே.எச்.எம். அபேயக்கோன்பண்டா ஆகியோருக்கு ரியர் அட்மிரல்களாகப் பதவி உயர்வு வழங்குவதில் பதவி உயர்வுச்சபை இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. சிறிலங்காக் கடற்படைத் தளபதிகள் இருவருக்கும் எதிராக கடந்த வருடம் நீதிமன்றம் சென்றதால் பதவி உயர்வுச்சபையிலுள்ளோரில் அரைவாசிப்பேர் இவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கக்கூடாதென வலியுறுத்துகின்றனர். மீதி அரைவாசிப்பேர் பதவி உயர்வுக்குச் சிபார்சு செய்துள்ளனர்.

கொமடோர் காரியவாசம் கொமடோர் அபேயக்கோன் பண்டா ஆகிய இருவரும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தமது பதவிநிலை எல்லைக்காலமாகிய மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்கின்றனர். இவர்கள் தற்போது பதவிவகிக்கும் பொறியியல் பிரிவு இயக்குனர், விநியோக, செயலக பணிப்பாளர் பதவிகள் வழமையாக ரியர் அட்மிரல் தரத்தில் உள்ளவர்களுக்கே வழங்கப்பட்டுவந்தது. இதனால் இவர்கள் இருவருக்கும் பதவி உயர்வு நிச்சயம் என எதிர்பார்க்கப்பட்டது. சேவை மூப்பின் அடிப்படையிலேயே இப்பதவி உயர்வுகள் வழங்கப்படுவதும் வழமையானதாகும்.

பதவி உயர்வுச் சபைக்குத் தலைமைதாங்கும் கடற்படைத் தலைமை அதிகாரி ரியர் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரம, ரியர் அட்மிரல் ரட்ண கீர்த்தி ஆகியோர் இவர்களின் பதவி உயர்வுக்கு ஆதரவாக உள்ளனர்.

ஆனால் கடற்படையில் மூன்றாம் இடத்தில் இருப்பவரும் கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதியுமான ரியர் அட்மிரல் கருணாகொட, கடற்படை சிரேஷ்ட செயலாளர் கப்டன் பிரேமதிலக ஆகியோர் பதவி உயர்வுக்கு எதிராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# எலி, பன்றிகளைப் பயன்படுத்தி கண்ணிவெடிகளை அகற்றும் திட்டம்

## மொறட்டுவ பல்கலை விரிவுரையாளர் முன்வைத்தார்

எலிகள், பன்றிகளைப் பயன்படுத்தி கண்ணி வெடிகளை அகற்றும் திட்டமொன்றை மொறட்டுவ பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் முன்வைத்துள்ளார். எலி, பன்றி என்பன மோப்ப சக்தி அதிகம் என்பதனால் இவற்றிற்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் குறைந்த செலவில் இப்பணியை செய்யலாம் என அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (யு.என்.டி.பி) ஏற்பாட்டில் நடைபெற்ற கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பான செயலமர்வில் இத்திட்டத்தை முன் வைத்த சிரேஷ்ட விரிவுரையாளரான திரிசாந்த நாணயக்கார, இப்போது நவீன கருவிகளைப் பயன்படுத்தி அதிக பொருட் செலவில் கண்ணி வெடிகள் அகற்றப்படுகின்றன. ஆனால் இவ் விலங்குகளைப் பயன்படுத்தினால் மிகக்குறைந்த செலவில் இப்பணியை பூர்த்தி செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக் கழகத்தில் இது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்த இவர், இங்கு கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடுள்ள சிறிலங்கா இராணுவத்தினர், ஹலோ அமைப்பு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பவற்றிடமிருந்து தகவல்களைப் பெற்றுள்ளதாகக் கூறியுள்ளார்.

# மக்களுக்காக எத்துயரங்களையும் தாங்கக்கூடியவாறு எம்மைத் தேசியத் தலைவர் வளர்த்துள்ளார்

## சஞ்ஜீவன் நினைவு நிகழ்வில் கவியன்பன்

மக்களின் நல்ல எதிர்காலத்திற்காக எத்தனை துயரங்களையும் தாங்கக் கூடிய பொறுமையுடன் எம்மைத் தேசியத் தலைவர் வளர்த்துள்ளார். தொடர்ந்தும் இராணுவத்தினர் எம்மீது அடாவடித்தனங்களைப் புரிகின்றபோதும் அதனை நாம் பொறுத்துக் கொண்டே இருக்கின்றோம் என்று யாழ்.மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற, இராணுவத்தினரால் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சஞ்ஜீவனின் மூன்றாவது ஆண்டு அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்தம் ஆரம்பமாகி 17 மாதகாலம் கடந்து அமைதிநிலவுகின்ற வேளையிலும் இராணுவத்தினர் எம்மீது புரிகின்ற ஒப்பந்த மீறல்களால் 28 வரையான போராளிகளை நாம் அநியாயமாக இழந்துள்ளோம். இத்தனை இழப்புக்கள் நிகழ்ந்த பின்பும் கொதிப்படையாது நாம் இன்றுவரையும் இருக்கின்றோம். எம்தலைவர் மக்களுக்காக எத்தனை அர்ப்பணிப்புக்களையும் செய்யக்கூடியவர்களாக எம்மை வளர்த்துள்ளார். எம்மால் சிந்தப்பட்ட குருதிக்கும் வியர்வைக்கும் இழக்கப்பட்ட உயிர்களுக்கெல்லாம் ஒரு முடிவு காணும் முகமாக நாம் நிம்மதியாக வாழ வேண்டிய ஒரு சூழலை உருவாக்க வேண்டும் என்றும்,

எம்தலைவர் எந்த முடிவை எடுத்தாலும் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படத்தயாராக இருக்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்..

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என்று பலர் பங்குபற்றியுள்ளனர். (33)

# பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களை முறைப்படி இயங்கவைக்க வேண்டும்

## மனித வள பண்பாட்டலுவல்கள் அமைச்சு

அரசாங்கப் பாடசாலைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களை முறைப்படியாக இயங்க வைக்காது நிதி மோசடி செய்யும் அதிபர்களுக்கு அதிகாரிகளுக்கும் எதிராக மிகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக் கப்படும் என கல்வி, மனிதவள, பண்பாட்டலுவல்கள் அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கல்வி மனித வள, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் வி.கே. நாணயக்கார அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அரசாங்கப் பாடசாலைகளில் பெற்றோருக்கும் பாடசாலை நிர்வாகத்தினருக்குமிடையே சுமுகமான நல்லுறவைப் பேணுவதற்காகவும், பாடசாலை அபிவிருத்தியில் பங்கெடுப்பதற்காகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் 1982ஆம் ஆண்டு முதல் அமைக்கப்பட்டன.

இவ்அபிவிருத்திச் சங்கங்களில் பெற்றோர் அதிகபங்குவகிக்க வேண்டும் எனத் தெளிவாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

வருடாந்தம் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட வேண்டுமென சட்டத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டிருப்பினும் அதிகமான பாடசாலைகளில் குறிப்பாக தேசிய பாடசாலைகள், மத்திய மகா வித்தியாலயங்களில் வருடக் கணக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் கூட்டப்படாது, தமக்கு விருப்பமான ஒரு சிலரை வைத்துக் கொண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களை அதிபர்கள் இயக்கி வருவதாக அமைச்சுக்குப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

# பரந்தன் நகரத்தில் புதிய சந்தைக் கட்டடம் திறப்பு

பரந்தன் நகர் புதிய சந்தைத் திறப்பு விழா நேற்று பி.ப. 1.30 மணிக்கு பரந்தன் பதிவாளர் திருமதி.இந்திரா பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. மங்கல விளக்கினை கரைச்சி பிரதேச சபை செயலாளர் திருமதி அன்னலிங்கம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை பரந்தன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சுதா ஏற்றிவைத்தார்.

அடுத்து சந்தைக்கட்டடத்தை கண்டாவளைப்பிரதேச செயலர் பி.கா.மத்தியாஸ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். கருத்துரைகளை கரைச்சிப் பிரதேசசபை செயலர் கண்டாவளை பிரதேச செயலர், பரந்தன் அரசியல் துறை பொறுப்பாளர், பரந்தன் கிராம சேவகர் கேதீஸ்வரன், பச்சிலைப் பள்ளி பிரதேச சபைச் செயலாளர் சிவராசா உள்ளூராட்சி ஆணையாளர் தனபாலசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து வியாபார நடவடிக்கைகள் ஆரம்பமாகின. (14)

## தமிழ்த் தினப்போட்டியில் முன்னிலையில்

நேற்று நடைபெற்ற முல்லை மாவட்ட தமிழ்த்தினப்போட்டியில் மு/ புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முன்னிலையில் உள்ளது.பிரிவு 3இல் தனி இசை-அருளானந்தம் பிரதீபன் 01ம் இடம்- நடனம் யோகநாதன் அனோஜா 01ம் இடம், பேச்சு-ஆனந்தமூர்த்தி டினேஸ்,02ம் இடம்.

பிரிவு 04ல்: தனிஇசை செல்வராசா நிசாந்தப்பிரியா 02ம் இடம். நடனம்-விஜயரட்ணம்-விஜயசாதனா 02ம் இடம்.

பிரிவு05இல்: நடனம்- கனகலிங்கம் விக்னா 01ம் இடம்,தனிஇசை-கனகசுந்தரசுவாமி ஜீவர்ஷினி 01ம் இடம். நாடகம்திறந்தபோட்டி 01ம் இடம், குழு இசை 01ம் இடம். பேச்சு சேலஹுரி செல்வகுமார் 02ம் இடம். விவாதம் திறந்தபோட்டி சுரேந்திரன் ரேரன்ஸ் 01ம் இடம். சகாயரட்ணராஜா நிரஞ்சன் 01ம் இடம். இரட்ணராஜா மரியோமசனந்தீபன் 01ம் இடம் ஆகிய இடங்களைப்பெற்று முன்னிலையில் நிற்பது குறிப்பிடத்தக்கது. (26)

## அரசின் திட்டத்திற்கு எதிர்ப்பில்லை

(கொழும்பு)

இலங்கையில் வாழும் நாட்டவர்களுக்கு குடியுரிமை வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்தை பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பி.யும் எதிர்க்காதென அந்த கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் கூறியுள்ளனர்.

இலங்கையில் வாழும் நாடற்ற பிரசைகளில் 168141 பேருக்கு இலங்கைக்குடியுரிமை வழங்குவதென கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.


# 12ஆம் ஆண்டு நினைவலைகள்

முத்தாக 12 - 07 - 1968



வீர வித்தாக 15 - 07 - 1991

## கப்டன் மனோ

### கோணலிங்கம் ஸ்ரீதரன்

*-தச்சவெளி, திருகோணமலை-*

மனிதத்தின் வீரத்தை மணலாற்றில் எழுதினாய்
போராட்டமே குடும்பம் என்று எண்ணினாய்- நீ
கல்லறைக்குள்ளே உறங்கும் போதும்
உன் உணர்வுகளின் பிரதிபலிப்புக்கள் நிறைவுறும்
உன் நினைவுகளோடு என்றும்.

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

(3456)


-பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்-

# குற்றம்சாட்டப்பட்ட இருவர் மேல் நீதிமன்றினால் விடுதலை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல்செய்யப்பட்ட இரண்டு வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டிருந்த இரண்டு நபர்கள் மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முதலாவது வழக்கில் அன்புவழிபுரத்தைச் சேர்ந்த செல்வநாயகம் நிதர்ஷன் மூதூரில் 1.09.2001க்கும் 15-12.2001க்குமிடையில் ஆயுதப் பயிற்சி பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

இரண்டாவது வழக்கில் கிளிவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி சுகுணதாஸ் என்பவர் பூவரசந்தீவு பொலிஸ் நிலையத்தில் இருந்த பொலிசாருக்கு மரணத்தை 20-06.98 இற்கும் 24.08.98ற்கும் இடைப்பட்ட காலத்தில் உண்டுபண்ணியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

சட்டமா அதிபரின் உத்தரவுக்கு இணங்க நபர்கள் மீதான குற்றப்பத்திரங்களை அரச வழக்கறிஞர் எஸ்.எம்.ஹமிம்டீன் வாபஸ் வாங்கியதை அடுத்து மேல்நீதிமன்ற நீதிபதி எஸ். பரமராஜாவினால் இரு நபர்களுக்கும் விடுதலை அளிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு விழா

சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனமும், பெற்றாரும் இணைந்து றெட்பானா பாரதிபுரம்செந்தாமரை முன்பள்ளியின் விளையாட்டு விழாவை கடந்த வியாழனன்று சமூக நலன்திட்ட இணைப்பாளர் செல்வி. அனுசா தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் நிகழ்த்தினர்.

அடுத்து தேசியக் கொடியினை விசுவமடு வலயப் பொறுப்பாளரும், தமிழர் புனர்வாழ்வுக்கழக கொடியினை நிகழ்வின் தலைவியான செல்வி அனுசாவும்,சமூகப் பொருளாதார வளர்ச்சிநிறுவனக் கொடியினைஆசிரியர் புவனேஸ்வரியும், முன்பள்ளி மேம்பாட்டுக் கொடியினை முதன்மை ஆசிரியர் சுகிர்தாவும்,முன்பள்ளிக்கான கொடியினை செந்தாமரை முன்பள்ளி ஆசிரியர் கோமதியும் ஏற்றி வைத்தனர்.

# புளியம் பொக்கணைத் திடலில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி நேற்று முன்தினம் புளியம் பொக்கணை சவாரித் திடலில் பி.ப.3.00 மணிக்கு போட்டி அமைப்பாளர் சி.தணிகாசலம் தலைமையில் ஆரம்பமானது. தமிழீழ தேசியக் கொடியை வட்டக்கச்சி காவல் பணிமனை உபபொறுப்பாளர் சுமதி ஏற்றினார். நிகழ்வின் மங்கலவிளக்கை தருமபுரம் தமிழர் எழுச்சி பேரவைத் தலைவர் செ.புஸ்பராசாவும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பிரதமகுரு சிவ ஸ்ரீ.அ. சிவலோக நாதக்குருக்களும் ஏற்றினர்.

இம்மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியில் யாழ். குடாநாட்டிலிருந்தும்வன்னியின் பலஇடங்களி லிருந்தும் கொண்டு வரப்பட்ட காளை மாடுகள் அ.ஆ.இ,ஈ பிரிவுகள் என நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டு கலந்து கொண்டன. இச்சவாரிப் போட்டியைக் கண்டுகளிக்க பெருந்திரளான மக்கள் வருகை தந்திருந்தனர். (14)


# முக்கிய அறிவித்தல்

2003.07.15ஆம் திகதிசந்திரன்பூங்காவில் ஒழுங்கமைக்கப்பட்ட நூலக,ஆயுர்வேத கண்காட்சி சர்வதேச கடற் பரப்பில் 2003.06.14ஆம் திகதி மாவீரரான பன்னிரு வேங்கைகளின் நினைவுநாள் அனுஷ்டிப்பு காரணமாக 2003.07. 16ஆம் திகதி நடைபெறும் என்பதனை அறியத்தருவதுடன் அன்றைய தினம் கண்காட்சியும், கலை நிகழ்வும் நடைபெறும் என்பதனை விசேட ஆணையாளர் [ கரைச்சிப் பிரதேச சபை] அவர்கள் அறியத்தருகிறார்.

செயலாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(சி-8423)



# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 28 - 12 - 1968



மறைவு 13 - 07 - 2003

## சுபத்திரா தங்கலிங்கம்

B.A.D.P.InED

முல்லை வலய சுதந்திரபுரம் அ.த.க .பாடசாலை ஆசிரியை சுபத்திரா தங்கலிங்கம் காலமான செய்தி இடியாய் எம் உளத்தை உலுக்குகின்றது.


உடல் ஊனமுற்றிருந்தபோதும் உளத் திடத்துடன், எம் எதிர்காலச் செல்வங்களின் வளர்ச்சியில் அக்கறைகொண்டு மிகக் கஷ்டமான பிரதேசத்தில் கண்ணியத்துடனும் - அர்ப்பணிப்புணர்வுடனும் சேவையாற்றி முல்லை வலய கல்வி மேம்பாட்டிற்குத் தனது பங்களிப்பை வழங்கிய இவர் சிறந்த அறிவிப்பாளரும் ஆவார்.

சுபத்திராவின் பிரிவில் துயருறும் அவரின் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

முல்லைத்தீவு வலய
கல்விப் பணிப்பாளரும்
வலயக் கல்விப்பணிமனை,
கல்விசார், கல்விசாரா
உத்தியோகத்தர்களும்.

(சி-8424)

# வீரவணக்கம்



லெப்-கேணல் செந்தமிழ்/வீரமணி
சின்னராசா சிவரூபன்



லெப்.கேணல் அன்புக்குமரன்
வல்லிபுரம் சிவகுமார்



லெப்.கேணல் கஜேந்திரன்
நல்லையாகிருஸ்ணன் கமில்தினேஸ்



மேஜர் வீரநாதன்
தியாகராசா தயாநிதி



லெப்.கேணல் கதிர்
செல்வரட்ணம் சசிந்திரன்

ஈழத்தாய் வயிற்றில் ஆழமான சோகங்கள்
மீளவும் பன்னிருவேங்கை வீழ்ந்ததால் வந்ததே
நாளுமோ நரபலி ஆளுவோர் அதில் வெறி
வாழுமோ இவ்வெறி மாழுமே மிகவிரைவில்.

கடல்த்தேவி அணைத்தவர்க்கு கட்டியபின்பா தண்டனை
குடல்நடுங்க வைத்த குலம் உடல் பொறுக்கிறதுஅமைதிகாக்க
மடலிலே மாயா ஜாலம் கடலிலே காடையர் கைவரிசை
படகிலே ஏறும் விரைவில் மடையரின் மட்டிச்சேட்டை.

வல்லவன் எந்தலைவன் சொல்லிலும் சோர்வடையான்
கல்லுடன் கூட மோதி பல்லுடைந்ததுதான் மிச்சம்
எல்லையற்றதுன்பம் அல்லும் தருவீர்களானால்
வில்லென விரைந்து புல்லெனப் பொசுக்கி வைப்பான்



மேஜர் கன்னியநாடன்
பொன்னம்பலம் கிருபாகரன்



மேஜர் நிர்மலன்
ரணராஜா ரகுநாத்





மேஜர் மணியரசன்
முத்துலிங்கம் லவக்குமார்




மேஜர் நிமால்/நிமல்
தங்கராசா செல்வக்குமார்



மேஜர் வள்ளுவன்
துரை சைலேஸ்வரன்



கப்டன் செழியன்/அன்புவெற்றி
சொக்கலிங்கம் ஜெகன்



நாட்டுப்பற்றாளர்
மோகன்

இம் மாவீரர்களுக்கு மெது வீரவணக்கத்தை
தெரிவித்துக்கொள்கிறோம்.


"தமிழர்தாகம் தமிழீத்தாயகம்"

சமாசம்,
சி.கூ.சங்கம்
முல்லைத்தீவு.

[3457]

தேசிய எழுச்சிப்பேரவை
புதுக்குடியிருப்பு/கோட்டம்.

# மைக்கிறோ சொவ்ற் நிறுவனமும் பில்கேற்சும்




**உ**லகிலே மென்பொருள் தயாரிப்பில் புகழ் பெற்ற முன்னணி நிறுவனம் மைக்கிறோ சொவ்ற் நிறுவனமாகும். தனிநபர், வர்த்தக கணினிகளுக்கும் இணையப் பயன்பாட்டுக்கு மென பெருந்தொகையான மென்பொருட்களை இது வெளியிட்டுள்ளது/வெளியிட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் 78 நாடுகளையும் பல பிரதேசங்களையும் சேர்ந்த 50 ஆயிரம் பேர் பணிபுரிகின்றனர். இது வருடாந்தம் 160 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் மேலான பெறுமதிக்கு மென் பொருட்களை விற்று வருகிறது.

இந்த நிறுவனத்தின் தலைவர் வில்லியம் (பில்) எச். கேற்ஸ் என்பவராவார். பொதுவாக பில் கேற்ஸ் **(Bill Gates)** என இவர் அழைக்கப்படுகிறார். 48 வயதான இவர் உலக மகா பணக்காரர்களில் ஒருவர். இவர் தனது 13ஆவது வயதில் கணினிகளுக்கான செய்நிரல்களை எழுத ஆரம்பித்தார். 1973இல் ஹாவாட் பல்கலைக்கழகத்தில் புகுந்த இவர் **BASIC** செய்நிரலாக்க மொழியை உருவாக்கினார். முதலாவது மைக்கிறோ கொம்பியூட்டராகிய எம்.ஐ. ரி.எஸ். அல்ரயர் **(MITS Altair)** இற்கு ஏற்றவாறு இந்த **BASIC** மொழி எழுதப்பட்டது.

பின்னர் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியதும் மைக்கிறோ சொவ்ற் எனும் நிறுவனத்தை 1975இல் தனது சிறுவயது கால நண்பரான பௌல் அலனுடன் இணைந்து ஆரம்பித்தார். எதிர்காலத்தில் கணினியானது அலுவலகங்களிலும், வீடுகளிலும் ஓர் இன்றியமையாத சாதனமாக அமையப் போவதை அன்றே ஊகித்துக் கொண்ட அவர்கள் தனிநபர் கணினிகளுக்கான மென்பொருட்களைத் தயாரிப்பதில் தீவிரமான ஈடுபாட்டைக் காட்டினர். இது மைக்கிறோ சொவ்ற் நிறுவனத்தையும் மென்பொருள் தயாரிப்புத் துறையையும் உச்சத்துக்கு கொண்டு சென்றது எனலாம்.

பில்கேற்சின் தலைமையின் கீழ் மைக்கிறோ சொவ்ற்றின் ஆராய்ச்சிகள் தொடர்ச்சியாகவும் முன்னேற்றகரமாகவும் அமைந்ததுடன் அவர்கள் தயாரித்த மென்பொருட்கள் மென் பொருள் தயாரிப்புத் துறையை உயர் நிலைக்கு வளர்த்தது. மைக்கிறோ சொவ்ற் நிறுவனம் 2002ஆம் ஆண்டு 16 பில்லியன் டொலர்களை மென்பொருள் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கெனச் செலவிட்டது.

இதேவேளை, மைக்கிறோ சொவ்ற் நிறுவனத்தின் தலைவரான பில்கேற்ஸ் கணினி தொடர்பான புத்தகங்களையும் எழுதியுள்ளார். 1999இல் பில்கேற்ஸ் எழுதிய **Business @ the Speed of Thoughte** புத்தகம் கணினித் தொழில் நுட்பம் எவ்வாறு வர்த்தகப் பிரச்சினைகளை புதிய அடிப்படையிலான முறையில் தீர்க்கிறது என விபரித்துள்ளார். இப்புத்தகம் 25 மொழிகளில் எழுதப்பட்டு 60 நாடுகளில் கிடைக்கின்றது. அத்துடன் **Road Ahead** எனும் புத்தகத்தையும் எழுதியுள்ளார். இவ்வாறு எழுதப்படும் புத்தகங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் தொழில்நுட்பக் கல்வியையும் அதில் தேர்ச்சியையும் ஏற்படுத்துவதற்கு உதவ பொது நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதாக மைக்கிறோ சொவ்ற் நிறுவனம் கூறுகிறது. இதேவேளை, மைக்கிறோ சொவ்ற் நிறுவனத் தலைவரான பில்கேற்ஸ் உயிரியல் தொழில் நுட்பத்திலும் மிகுந்த ஈடு பாடுள்ளவர். இப்பொழுது இவரது நிறுவனம் பல உயிரியல் தொழில் நுட்ப நிறுவனங்களிலும் முதலீடு செய்துள்ளது. மேலும் உலகளாவிய ரீதியான கட்புலத் தகவல்களை - படங்களை, வீடியோக்களை சேகரித்து சேமிப்பதிலும் அவர் ஈடுபட்டு வருகிறது.







பில்கேட்ஸ்சின் புதிய முதலீடுகள் செலூலர் தொலைபேசி நிறுவனங்களிலும் இடப்பட்டுள்ளது. இது நூற்றுக்கணக்கான குறைந்தளவு தூரத்தில் இயங்கும் செய்மதிகளின் துணைகொண்டு உலகளாவிய தொலைபேசிச் சேவையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கணினி உலகில் மென்பொருள் தயாரிப்புத் துறையானது துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் ஒன்றாகும். பொதுப் பயன்பாட்டு மென்பொருட்களாயினும் சரி, பிரயோக மென்பொருட்களாயினும் சரி விசேட பிரயோக மென்பொருட்களாயினும் சரி தீவிரமாக வளர்ச்சி பெற்று வருகின்றன.

மென்பொருட்களைத் தயாரிக்கும் பல்வேறு நிறுவனங்களிடையே காணப்படும் வர்த்தகப் போட்டியானது மென்பொருட்துறையின் தீவிர வளர்ச்சிக்கு காரணமாக அமைகின்றன. அத்துடன் மென்பொருள் வர்த்தகத் துறையானது நாடு, மொழி, இனம் கடந்து வியாபித்துக் காணப்படுவதால் அதில் புரளும் பணத்தொகையும் பல கோடி டொலர்களாக உள்ளன. இதனால் மென்பொருள் ஆராய்ச்சிக்கென பெருந்தொகை பணம் செலவிடப்படுகிறது.

அத்துடன் உலகளாவிய ரீதியில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் பணபலத்தால் ஒருங்கிணைக்கப்படுவதும் அதன் தீவிர வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். இதுவே தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சிக்கும் காரணமாகும்.

இதேவேளை, மென்பொருள் தயாரிப்பில் கணினி மென்பொருள் துறை நிபுணர்கள் மட்டும் ஈடுபடுவதில்லை. கணினி பல்வேறு துறைகளுக்கும் பரந்து விரிந்துள்ளதால் அவ்வவ்துறை சார்ந்த நிபுணர்களினதும் பங்களிப்பும் மென்பொருள் துறைக்கு பெறப்படுகின்றது. அதாவது மருத்துவம், பொறியியல், வணிகம் முதல் விளையாட்டுக்கள் வரையான பெருமளவான மென்பொருள் தயாரிப்புகளுக்கு துறைசார்ந்த நிபுணர்களின் பங்களிப்பு பெறப்படுகிறது.

இவ்வாறு பல்துறை சார்ந்தோரின் பங்களிப்பால் தயாரிக்கப்படும் மென்பொருள்களையே இன்று உலகளாவிய ரீதியிலான கணினிப் பயன்பாட்டாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

**சி.சிவபாலன்**

---

# சிறிலங்கா புலனாய்வுத்துறை உயர் மாநாட்டில் அமெரி. புலனாய்வுத்துறை அதிகாரி பங்கேற்பு

## தற்கொலைத் தாக்குதல் குறித்து அறிவதில் ஆர்வம்

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சில் அண்மைக் காலமாக நடைபெறும் புலனாய்வுத்துறை அதிகாரிளுக்கான உயர்மட்ட மாநாடுகளில் அமெரிக்க புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் கலந்து கொள்வது தொடர்பாக சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினரிடையே பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இவ் அதிகாரி தற்கொலைத் தாக்குதல் குறித்து அறிந்து கொள்வதில் தீவிர கவனம் செலுத்தியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகரும், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான மெரில் குணரட்ன தலைமையில் சகல படையணிகளினதும் புலனாய்வுப் பிரிவினர்களுக்கான உயர் மட்டக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவினரிடையே வாராந்தம் நடைபெறும் இந்தக் கூட்டங்களிலே இந்த அமெரிக்க அதிகாரியும் கலந்து கொண்டுள்ளார்.

சிறிலங்காவில் இதுவரை காலமும் இல்லாதவாறு, முதல் தடவையாக இவ்வாறான கூட்டங்களில் அமெரிக்கர் ஒருவர் கலந்து கொள்வது புலனாய்வு வட்டாரங்களிடையே பெரும் குழப்பத்தையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான கூட்டங்கள் மிகவும் முக்கியமானவை. சகல புலனாய்வுப் பிரிவினரிடமுமிருந்து கிடைக்கும் மிகமிக இரகசியத் தகவல்கள் குறித்து இங்கு மிக விரிவாக ஆராயப்படுவதுடன் அந்தப் புலனாய்வாளர்கள் குறித்தும் சில தகவல்கள் ஆலோசிக்கப்படும்.

இந்த நிலையில் சிறிலங்காவின் வரலாற்றில் என்றுமில்லாதவாறு சகல புலனாய்வுப் பிரிவுகளினதும் தலைவர்களும் பங்குபற்றும் மாநாட்டில் வெளிநாட்டவர் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக உள்ளக புலனாய்வுத் துறையின் இயக்குநரகம் (டி.ஐ.ஐ.) தெரிவித்துள்ளது.

இவ்வாறு வெளிநாட்டவரொருவர் இந்த மாநாடுகளில் அனுமதிக்கப்படும் செயலானது அரச படையினருக்கும் புலனாய்வுத் தகவல்களை வழங்குவோருக்கும் பெரும் ஆபத்தானதென்பதுடன், தேசிய பாதுகாப்பிற்கும் இது பேராபத்தாகி விடுமென புலனாய்வு வட்டாரங்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மேற்படி அமெரிக்க புலனாய்வுத்துறை அதிகாரி விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் குறித்தே முழுக் கவனத்தையும் செலுத்தி இந்தக் கூட்டத்தில் புலனாய்வுப் பொறுப்பதிகாரிகளிடம் நேரடியாகக் கேள்வியெழுப்பி வருகின்றார்.

இந்தக் கேள்வியானது, புலிகளின் தற்கொலைப் படையினர் முதற்கொண்டு தற்போது தாக்குதலொன்றுக்குப் புலிகள் தயாராகி வருவதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதுவரையுள்ளது.

வெளிநாடுகளைப் பொறுத்தவரை, இவ்வாறான உயர் மட்ட பாதுகாப்பு மாநாட்டில் வேற்று நாட்டவரை அனுமதிப்பதென்பது தாய் நாட்டுக்கெதிரான சதிவேலையாகவே கருதப்படுமெனவும் இந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

எனினும், இந்த அமெரிக்கரை மேற்படி கூட்டங்களில் கலந்து கொள்ள அனுமதித்தது யாரென்பது குறித்து பாதுகாப்பு அமைச்சுக்கே தெரியாதென அமைச்சின் அதியுயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேநேரம் தங்கள் நாட்டைச் சேர்ந்த எவரும் சிறிலங்காவில் நடைபெறும் இவ்வாறான புலனாய்வு மாநாடுகளில் கலந்து கொள்ளவில்லையென சிறிலங்காவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இவ்வாறானதொரு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தங்கள் நாட்டவர்கள் எவரும் அழைக்கப்படவில்லையென அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

அவ்வாறாயின் இந்தக் கூட்டங்களுக்கு இவரை அனுமதித்தவர்கள் யார் எனும் கேள்வியும் அதிகாரிகள் மத்தியில் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

---

### - நாடாளுமன்ற வளாவிற்குள் -

# கண்டி பா.உ.வின் மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கியுடன் கைது

நாடாளுமன்ற கட்டடத் தொகுதிக்குள் அனுமதியின்றி கைத்துப்பாக்கி ஒன்றை எடுத்துச் சென்ற கண்டி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவரிடமிருந்து கைத்துப்பாக்கியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.பாராளுமன்ற உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இவரால் கைத்துப்பாக்கியை எவ்வாறு எடுத்துச்செல்ல முடிந்தது? என்பது குறித்து விசாரணை நடை பெறுகிறது.குறிப்பிட்ட மெய்ப்பாதுகாவலர் வைத்திருந்த கைத்துப்பாக்கி கண்டி நாடாளுமன்ற உறுப்பினருடைய தல்லவென்றும் வேறொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு உரியதென்றும் கூறப்படுகிறது.

---

### -கரைச்சிப் பிரதேச சபையால்-

# உள்ளூராட்சி வாரத்தில் பல வேலைத் திட்டங்கள் ஏற்பாடு

உள்ளூராட்சி வாரத்தில் கிளிநொச்சிக் கரைச்சிப் பிரதேச சபையால் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் பல இடங்களில் பல வேலைத் திட்டங்கள், நிகழ்வுகள் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இன்று கிளிநொச்சி சந்திரன் பூங்காவில் நூலக ஆயுர்வேத மூலிகைக் கண்காட்சியும் நாளை கிளிநொச்சி சந்திரன் பூங்காவில் உள்ளூராட்சி வார விழாவும் நடைபெறவுள்ளன. அதில் முன்பள்ளி சிறார்கள்/பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், மூதாளர் பேணலக முதியோர்க்குச் சத்துணவு விநியோகம், பரிசளிப்பு நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளது. 17ஆம் திகதி வட்டக்கச்சி மயில் மயானம், திருநகர் மயானம், தர்மபுரம், முரசுமோட்டை பொதுச் சந்தைகள் ஆகிய பகுதிகளில் சிரமதானப் பணிகளும் நடைபெறவுள்ளன.

18-ம் திகதி மரம் நாட்டுவிழா கிளி/பொழுதுபோக்கு வலயம், கிளி/பொது விளையாட்டு மைதானம், கிளி/பழைய சந்தைக்காணி, முரசுமோட்டை கரைச்சிப் பிரதேச சபை உபஅலுவலகம் என்பனவற்றில் நடைபெறவுள்ளன. 19-ம் திகதி அக்கராயன் மயானம், கந்தபுரம் சந்தை ஆகிய இடங்களில் சிரமதானப் பணியும், 20 ஆம் திகதி கிளி/பொதுச் சந்தை, கிளி/பஸ் தரிப்பு நிலையம், கண்டிவீதி ஆகிய இடங்களிலும் சிரமதானப் பணிகள் நடைபெறவுள்ளன. 21 ஆம் திகதி பரந்தன் பொதுச் சந்தைக்கிணறு, சந்திரன் பூங்காக்கிணறு என்பன இறைத்துச் சுத்தப்படுத்துதல் ஆகிய வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக கரைச்சிப் பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (14)

---

# அரசாங்கம்-புலிகள் பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும்

### - கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சு வார்த்தைகள் இயன்றளவு விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தித் தெரிவித்துள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களைச் செய்வதன் மூலம் சமாதானப் பேச்சு வார்த்தைகள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தேசிய மட்டத்தில் விழிப்புணர்வுகள் நடத்தப்படவேண்டும். எதிர்காலத்தில் இடம்பெறும்தேர்தல் பிரச்சாரங்களின் போது இந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படவேண்டும். சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்துவதில் எதிர்க்கட்சியினரது ஆதரவைப் பெற்றுக்கொள்வது ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியின் கடமையாகும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ராஜா கொல்லுரே கண்டியில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

# யாழ். நகரின் பல்வேறு பகுதியில் புதிய இராணுவக் காவலரண்கள் அமைப்பு

யாழ். நகரின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த சில நாட்களாகப் புதிய காவலரண்களை அமைக்கும் நடவடிக்கைகளில் அங்குள்ள சிறிலங்காப் படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

கோட்டையின் உட்புறப் பகுதி துரிதமாகத் துப்புரவாக்கப்பட்டு வருகிறது. இப்பணியில் பெருமளவு படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் மத்திய கல்லூரிக்கு அருகாமையிலுள்ள அசோகா விடுதியில் இருக்கும் பொலிஸ் தலைமையகப் பாதுகாப்பிற்காக மணிக்கூட்டுக் கோபுரத்திற்கண்மையிலும் முதலாம் குறுக்குத் தெருச் சந்தியிலும் புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. வேம்படி மகளிர் கல்லூரியின் முன்பாகவும், இரண்டாம் குறுக்குத்தெரு மற்றும் பெருமாள் கோயில் முன்பாகவும் புதிய காவலரண்கள் அமைக்கப்படுகின்றன. அத்தோடு நகரின் பல் வேறு பகுதிகளிலும் படையினரது ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. முக்கிய வீதிகள், சந்திகளில் முழு ஆயத்த நிலையில் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

படையினரின் இச் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் அச்சத்தையும், பதட்டத்தையும் ஏற்படுததியுள்ளது.

# ரத்வத்தவும் புதல்வர்களும் பிணையில் விடுதலை

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த மற்றும் அவரது இரு புதல்வர்கள் உள்ளிட்ட 15 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் இந்த உடத்தலவின்ன கொலை வழக்கு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இவர்கள் அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றம் வழங்கிய அனுமதிக்கமைய நேற்று முன்தினம் இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## காணாமல்போனோர் தொடர்பான

# தனிநபர் விசாரணைக்குழுவின் விசாரணைகள் முடிவடைந்தன

சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன தமிழ் இளைஞர்கள், யுவதிகள் தொடர்பான ஆறாம் கட்ட விசாரணைகளை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தனிநபர் விசாரணைக் குழு முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்ற இவ்விசாரணையில் முடிவுடன் இதுவரைகாணாமல் போனோர் தொடர்பான 330 வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த 330 வாக்கு மூலங்களில் 90 வீதமான வாக்குமூலங்கள் முடிவுறுத்தப்பட்டதாகவும் எஞ்சிய வாக்கு மூலங்கள் தொடர்பான விசாரணைகளும் விரைவில் முடிவுறுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்களில் சிலர் இன்னமும் ஆஜராகிவாக்கு மூலங்களை அளிக்கவில்லை எனவும், அவர்களுக்கான சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்படவுள்ளதாகவும், இவ்விசாரணை தொடர்பான இறுதியறிக்கையை அடுத்த மாதம் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவினர் தமது கொழும்புத் தலைமையிடம் கொடுக்கவுள்ளதாகவும் மேற்படி தனிநபர் மனிதவுரிமைக்கான குழுவினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்புத் தலைமையலுவலகம் கொழும்பில் வெளியிடும் எனவும் அறிவித்துள்ளனர். இதேவேளை, கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் தொடர்பாக சிறிலங்கா பொலிசாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளும் இடம்பெற்று வருகின்ற போதிலும் அது தொடர்பான முடிவுகள் எதுவும் வெளியிடப்படவில்லை எனவும் அரச அதிகாரிகள் அனைவரும் இவ்விடயங்களில் போதிய அக்கறை இன்றிச் செயற்பட்டு வருவதாகவும் காணாமல் போனோர் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எதனையும் அரச அதிகாரிகளோ நாடாளுமன்ற உறுப்பினர்களோ எடுக்கவில்லை எனவும் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. (27)

## 20 ஆம் ஆண்டு நினைவுத் தடத்தில்





**ஆனந்** (இராமநாதன் அருள்நாதன்)
பிறப்பு :- 25-01-1964
வீரச்சாவு:- 15-07-1983

**சீலன்** (சாள்ஸ் அன்ரனி)
வீரச்சாவு :- 15-07-1983

**செல்லக்கிளி**
வீரச்சாவு :- 23-07-1983

*அன்று வித்தான வேங்கைகளே!*
*உங்கள் இலட்சியக் கனவுகள் நனவாகி,*
*இன்று தலைவரின் தலைமையில்,*
*ஈழமெங்கும் மலர்கின்றன.*
*நாளை ஒலிக்கும் சுதந்திர கீதம்*
*துயில் இல்லங்களில் உங்களை*
*துயில் எழுப்பும்.*

மண்மீட்புக்கான உங்கள் வீரமரணத்தின் 20 ஆவது வருடத்தை நினைவு கூர்ந்து, வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளும்

ஆனந் குடும்பத்தினர்.

(3428)

வேளாண் மேம்பாட்டிற்கு உறுதுணையாக,
உழவர் பெருமக்களின் நண்பனாக இன்று
2003-07-15 ஆம் நாள் கண்டிச் சாலை, கிளிநொச்சியில்
தனது பணியைத் தொடங்குகிறது.

வேளாண் பெருமக்களுக்கு ஒரு நற்செய்தி

"வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவனம்"
(THE VANNI AGROTECHS)

பின்வரும் பணிகளை முதன்மைப்படுத்துகிறது

- வேளாண் பொறிகளையும் கருவிகளையும் விற்பனை செய்தலும் வாடகைக்கு விடுதலும்.
- மண்வள ஆய்வு
- மண்ணுக்கேற்ற வளமாக்கிகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்தல்.
- வேளாண் மேம்பாட்டிற்குத் தேவையான தொழில்நுட்ப மதியுரையும் பயிற்சியும் வழங்குதல்
- நல்லின விதை விற்பனை
- விளைபொருளுக்கு உரிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- கால்நடை மேம்பாட்டிற்கு உள்ளீடுகளை விற்பனை செய்தலும் மதியுரை வழங்குதலும்.

என்றென்றும் உழவரின் நண்பனாக பணியாற்றக் காத்திருக்கும்

"வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவனம்"

☎ 0712-349696

(சி-8420)



### சிந்தனைக்கு

நாம் விரும்பினாலும் விரும்பாது விட்டாலும் போராட்டமே எமது வாழ்க்கையாகவும், வாழ்க்கையே எமது போராட்டமாகவும் மாறிவிட்டது.

தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 15-07-2003

## திசைமாறிச் செல்லும்.....!

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும் இஸ்ரேலுக்கு உத்தியோக பூர்வ விஜயங்களை மேற்கொண்டுள்ளனர். இவர்களின் விஜயங்கள் தனித்தனியானவையெனினும் இவர்கள் இருவரும் ஏக காலத்தில் இஸ்ரேலில் உள்ளனர் என்பதும், சிறிலங்கா கடற்படைக்கென 15 நவீன ரக பீரங்கிகளை சிறிலங்கா அரசு கொள்வனவு செய்துள்ளது என்பதும் நிராகரிக்கப்பட முடியாத உண்மைகளாகும்.

சிறிலங்கா அரசாங்கத் தரப்பு, இவ்விருவரது விஜயங்களும் ஒரே காலப்பகுதியில் நிகழ்ந்துள்ளமையானது சந்தர்ப்பவசத்தால் ஆனது என விளக்கம் அளிக்க முற்பட்டதாயினும், இவ்விளக்கமானது ஏற்புடையதொன்றாகவோ, பொருத்தப்பாடு உடையதொன்றாகவோ இருப்பதற்கு இல்லை. அத்தோடு, இவ்விருவரது விஜயங்களும் இஸ்ரேலுடனான இராணுவ ஒத்துழைப்புக்கானதாக இருப்பதைவிட வேறு எதற்காகவும் இருக்க முடியாது.

சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் இஸ்ரேலுக்கான விஜயமானது பத்து நாட்கள் கொண்டதாகும். உத்தியோக பூர்வ விஜயம் என்ற ரீதியில் இவ்விஜயமானது வழமைக்கு மாறாக மிக நீண்டதொன்று என்பதில் சந்தேகமில்லை. அதேபோன்று இக்காலப் பகுதியில் பாதுகாப்பு மற்றும் இராணுவ ஒத்துழைப்புக் குறித்து பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு என்பதும் நிராகரிக்க முடியாததே.

சிறிலங்கா அரசாங்கம், பாதுகாப்பு அமைச்சரினதும், கடற்படைத் தளபதியினது விஜயங்கள் திட்டமிட்ட ரீதியில் அல்லாது சந்தர்ப்ப வசத்தால் ஒரே காலப்பகுதியில் நிகழ்ந்துள்ளதாக சாக்குப் போக்குக் கூறலாமே ஒழிய பாதுகாப்பு அமைச்சர் வர்த்தக ஒத்துழைப்புத் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்குச் சென்றுள்ளார் என விளக்கம் அளித்து விட முடியாது. ஏனெனில், அது நகைப்பிற்கு இடமானதாகிவிடும்.

இதேவேளை, சிறிலங்கா கடற்படைத் தளபதியின் விஜயமானது, பீரங்கிகள் கொள்வனவிற்கானது என்பது வெளிப்படையானது. அதாவது அமெரிக்கா குறைந்த விலையில் பீரங்கிகளை வழங்க முன் வந்துள்ளபோதும் உடனடித் தேவை கருதி அதிக விலை கொடுத்துஇஸ்ரேலிடம் இருந்து பீரங்கிகளைக் கொள்வனவு செய்வதற்கெனக் கடற்படைத் தளபதி இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதனால், சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சரும் சரி கடற்படைத் தளபதியும் சரி அரசாங்கம் கூறுவது போன்று எதிர்பாராத விதத்தில் ஒரே காலப் பகுதியில் இஸ்ரேலுக்கு விஜயத்தினை மேற்கொண்டிருப்பினும், இருவரது நோக்கமும் ஒன்றே என்பதை அரசாங்கம் சரி வேறு எவருமே சரி நிராகரித்துவிட முடியாது. அதாவது இஸ்ரேலுடனான இராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கிலும், அதற்குப் புத்துயிர்ப்பு அளிக்கும் நோக்கிலும் இவ் விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மறுத்துவிட முடியாது. இதனைச் சில அரச தரப்பு விளக்கங்கள் கூட ஊர்ஜிதம் செய்பவையாகவே உள்ளன.

எடுத்துக் காட்டாக, இஸ்ரேலிடம் ஆயுதக் கொள்வனவு செய்வதற்கு உடனடியாக ஆயுதங்களை விநியோகிக்க அது தயாராக உள்ளது என்பதும், நீண்ட காலமாக சிறிலங்காவிற்கு ஆயுதங்களை விநியோகித்து வரும் நாடு என்ற ரீதியிலும் இக் கொள்வனவிற்கான முன்னுரிமை அளிக்கப்படுகின்றது என்பது அரச தரப்பு விளக்கமாகும். அதாவது கடந்த நெருக்கடி காலத்தில் உதவியவர்கள் என்ற ரீதியில், இஸ்ரேலிடம் கொள்வனவிற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் பார்க்கையில், இஸ்ரேலுடனான இராணுவ ஒத்துழைப்பிற்கு ஐ.தே. முன்னணி அரசாங்கம் முக்கியத்துவம் அளித்துள்ளது என்பதே வெளிக்காட்டுவதாய் உள்ளது. இதனால் எழும் கேள்வி என்னவெனில், இஸ்ரேலுடனான இவ் இராணுவ ஒத்துழைப்பு புதுப்பிக்கப்பட வேண்டிய தேவையும், உடனடியாக ஆயுதக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவையும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஏன் ஏற்பட்டுள்ளது என்பதே ஆகும்.

தமது ஆயுதப் படைகளை அரசுகள் நவீனப்படுத்துவதற்காக ஆயுதக் கொள்வனவில் ஈடுபடுதல் என்பது குறை காண்பதற்கான தொன்றல்லத்தான். ஆனால், சிறிலங்காவின் ஆயுதப்படையை நவீனப்படுத்துவதை அவ்வாறு நோக்கமுடியாது. ஏனெனில், யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்று அமுலில் இருக்கையில், உடனடித் தேவை என்ற ரீதியில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதையும் பாதுகாப்பு அமைச்சர் சர்வதேச கட்டுப்பாடுகள் எதையும் அனுசரிக்காத நாடு ஒன்றிற்கு நீண்ட கால விஜயத்தை மேற்கொண்டிருப்பதும் கடந்த கால ஒத்துழைப்பின் அடிப்படையில் புதிய கொள்வனவிற்கு முக்கியத்துவம் அளிப்பதும் சிறிலங்கா அரசாங்கம் சமாதான முயற்சிகளில் கொண்டுள்ள ஈடுபாடு குறித்துச் சந்தேகத்தைத் தோற்றுவிக்கத்தக்கதாகும்.

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் – விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாட்டினை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு பல தடவைகள் ஈடுபட்டதுண்டு. இதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டுமாயினும் ஆயுதப் படைத்தரப்பில் உள்ள சமாதானத்திற்கு விரோதமான சக்திகள் மற்றும் சனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என விளக்கம் அளிக்க அது முற்பட்டதுண்டு. ஆனால், தற்பொழுது, மேற்கொள்ளப்படும் ஆயுதக் கொள்வனவு மற்றும் பாதுகாப்புக் குறித்த பேச்சுவார்த்தைகளுக்கு அரசாங்கம் வேறு எவர் மீதும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவிட முடியாது. அதேசமயம், இது ஒரு வழமையான நடவடிக்கை எனவும் விளக்கம் அளித்துவிட முடியாது. ஏனெனில், இது சமாதான முயற்சிகளுக்கு எதிராக அரசாங்கமே திசைமாறிச் செல்லும் நடவடிக்கையாகவே கொள்ளத்தக்கதாகும்.

## தமிழகத்தில் முகவர்களால் ஏமாற்றப்படும் இலங்கைத் தமிழகதிகள் பரிதவிப்பு

தமிழகத்தின் வேலூர் அகதிகள் முகாமிலிருந்து இலங்கை அகதிகள் 11 பேர் இலங்கை செல்வதற்கான முகவர்களால் அழைத்துவரப்பட்ட நிலையில் கடந்த 03 நாட்களாக தங்கச்சி மடம் கடற்கரையிலுள்ள வேளாங்கண்ணி கோயிலில் பசிபட்டினியோடு படகுக்காகக் காத்திருக்கின்றனர்.

இது குறித்துத் தெரிவிக்கப்படுவதாவது, தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாமில் தங்கியுள்ள இலங்கையர்கள் இராமேஸ்வரம் வழியாகக் படகுகளில் இலங்கை செல்வதும், முகவர்களால் ஏமாற்றப்படுவதும் அவ்வப்போது நடந்துவருகின்றது.

இலங்கையில் தங்களது தாய் மண்ணில் வசிக்க இலங்கை செல்ல அகதிகள் விரும்புகின்றனர். இவர்களை அனுப்புவதற்கென பல முகவர்கள் தமிழகத்திலுள்ள அகதிகள் முகாம்களில் வலம் வருகின்றனர்.

குறைந்த செலவில் படகில் இலங்கை செல்லலாம் எனும் ஆசை வார்த்தைகளை நம்பி, இருக்கும் பணத்தையும் முகவர்களிடம் கொடுத்து விட்டு ஏமாற்றம் அடையும் பரிதாப நிலைக்கே அகதி கள் தள்ளப்பட்டுள்ளனர்.

வேலூர் அகதிகள் முகாமில் இருந்து முகவர்கள் மூலம் அழைத்து வரப்பட்ட 03 சிறுவர்கள், 05 பெண்கள் உட்பட 11 அகதிகள், கடந்த 03 நாட்களாக தங்கச்சிமடம் கடற்கரையில் இலங்கை செல்வதற்காக ஒளித்திருக்கின்றார்கள்.

கடற்கரையில் உள்ள வேளாங்கண்ணி கோயிலில் தங்கி பசி, பட்டினியோடு படகிற்காகக் காத்திருக்கும் இவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

முகாமில் மிகவும் கஸ்ரத்துடன் வாழ்ந்து வருகின்றோம். முறையான வேலைவாய்ப்பு எதுவுமே கிடைக்காமையினால் தினசரி சாப்பாட்டிற்கே கஸ்ரமாக உள்ளது.

இலங்கைக்குத் திரும்பிச் சென்றால் எங்களது சொந்த ஊரில் ஏதாவது தொழில் செய்து பிழைத்துக் கொள்வோம். விமானத்தில் செல்வதற்குப் பணவசதி இல்லாமையினால் தான் இந்த வழியில் இலங்கை செல்வதற்கு முன் வந்தோம் எனக் கூறியுள்ளனர்.

ஆனால் தங்களது பெயர்களைக் கூற மறுத்துவிட்டனர்.

தங்களிடம் பணம் வாங்கிக் கொண்டு கடற்கரைக்கு அழைத்து வந்த முகவரையும், இலங்கைக்கு அழைத்துச் செல்ல வரும் படகையும் ஆவலோடு எதிர்பார்த்து இந்த அகதிகள் காத்திருக்கின்றனர். இலங்கை செல்வதற்கு அகதிகள் தங்கச்சிமடம் கடற்கரையில் தங்கியுள்ள தகவல் கிடைத்தும் பொலிசார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதற்கு முன் வரவில்லை.

## மனைவி, மகளைச் சுட்டுக்கொன்ற பொலிஸ் கான்ஸ்டபிள் சரண்

மனைவி, மகள் ஆகிய இருவரையும் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற பொலிஸ் கான்ஸ்டபிள் கொலைக்குப் பயன்படுத்திய கைத்துப்பாக்கியுடன் கடந்த 12ஆம் திகதி காலை கண்டி பேராதனைப் பொலிசாரிடம் சரணடைந்துள்ளார்.

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஆயுத களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றும் இப் பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த 10 ஆம் திகதி இரவு பேராதனை ஈரியகமவில் உள்ள தன் வீட்டிற்குச் சென்று தனது மனைவியையும், 11 வயது மகளையும் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த பின்னர் தலைமறைவாகியிருந்தார். இவ் இரட்டைக் கொலைகளையடுத்து நீதவான் லியோன் செனவிரட்ண ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்ட பின்னர் சந்தேக நபரைக் கைது செய்ய உத்தரவிட்டிருந்தார். இந் நிலையிலேயே சந்தேக நபர் நேற்று முன்தினம் சரணடைந்துள்ளார்.

## இராணுவச் சிப்பாய் மீது துப்பாக்கிச்சூடு ; ஏறாவூரில் பொலிசார் ஒருவர் கைது!

ஏறாவூர் நகரில் கடந்த திங்கட் கிழமை இரவு இராணுவ சிப்பாய் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எம்.பி. முகம்மது தாஹா எனும் இவர் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

இவரது துப்பாக்கி பரிசோதனைக் குட்படுத்தப்படவுள்ளது.

ஏறாவூரைச் சேர்ந்த இந்த கான்ஸ்டபிள் பொலிஸ் நிலையத்திலிருந்து கடமை முடிந்து வீடு செல்லும் போது துப்பாக்கியையும் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் பிரதியமைச்சர் பசீர் சேகு தாவூத்தின் மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலிலிருந்து பிணையில் விடுதலை செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் மீது கடந்த திங்கட்கிழமை இரவு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்கா அணி சிறந்த பலம் கொண்டது; முன்னிலைக்குக் கொண்டு வரப்பாடுபடுவேன்

### புதிய பயிற்சியாளர் ஜோன் டைசன்

சிறிலங்கா கிரிக்கெட் அணியை முன்னிலைக்குக் கொண்டுவரும் சவால்களை தாம் ஏற்கப் போவதாக சிறிலங்கா அணியின் புதிய பயிற்றுவிப்பாளரான ஜோன் டைசன் தெரிவித்துள்ளார்.

1981 ஆம் ஆண்டு சிறிலங்கா வந்த அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்த டைசன் சிறிலங்கா அணியை புதிய தொழிநுட்ப முறையில் கொண்டு செல்ல இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

1854 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆம் திகதி சிட்னியில் பிறந்த டைசன் 30 டெஸ்ட் போட்டிகளிலும் 29 ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

முதல் தரப் போட்டிகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்த இவர் அவுஸ்திரேலியாவின் பிராந்திய அணியான நியூ சௌத்வேல்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றியுள்ளார்.

நேற்று முன்தினம் சிறிலங்கா வந்த அவர், சிறிலங்கா அணியை வெகுவாகப் பாராட்டியதுடன் சிறந்த பலத்தைக் கொண்ட சிறிலங்கா அணி மேற்கிந்திய தீவு கிரிக்கெட் தொடரில் விளையாடியது போன்று விளையாடினால் சிறந்த பெறுபேறுகளைப் பெறமுடியும் என்று கூறியுள்ளார்.

## சிறிலங்கா சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சிவராமகிருஷ்ணன் பயிற்சி வழங்குவார்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான சிவராமகிருஷ்ணன் சிறிலங்காவின் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

இன்று முதல் எதிர்வரும் 17ஆம் திகதி வரை இவர் இந்தப் பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

சுழற்பந்து வீச்சாளரான இவர் 1983ஆம் ஆண்டு முதல் 1987ஆம் ஆண்டு வரை இந்திய அணி சார்பாக விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2004இல் ஸ்ரீவ்வோ ஓய்வு பெறுகிறார்?

அடுத்த வருடம் இந்தியாவில் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரின் பின்னர் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணித் தலைவரான ஸ்ரீவ்வோ ஓய்வு பெறவுள்ளார்.

2004 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் டெஸ்ட் தொடரின் பின் ஓய்வு பெறப்போவதாக செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார். தற்போது பங்களாதேஷ் டெஸ்ட் தொடர் குறித்து கூடிய கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கும் ஸ்ரீவ்வோ இந்தியாவில் நடாத்தும் அனாதைச் சிறுவர் இல்லங்களுக்குத் தாம் கூடுதல் உதவியை வழங்கப் போவதாக தெரிவித்துள்ளார். மேலும் 200 சிறுவர்கள் கல்வி கற்கக் கூடிய புதிய பாடசாலை ஒன்றையும் நிர்மாணிக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

## தென்னாபிரிக்காவை வீழ்த்தி இங்கிலாந்து அணி சாம்பியன்

நட்வெஸ்ட் கிண்ண முக்கோணத் தொடரில் இங்கிலாந்து 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, சிம்பாவ்வே அணிகள் கலந்து கொண்ட மேற்படி தொடரின் இறுதிப் போட்டி லோட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

முதலில் ஆடிய தென்னாபிரிக்கா சகல விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 20.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.



# தகுதியற்ற அரசியல்வாதிகள் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள்

## சனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டுக்குச் சேவையாற்ற தகுதியற்ற அரசியல்வாதிகளை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்படுமென சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று கொழும்பில் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த அரசியல்வாதிகள் அரசியலை வியாபாரமாக்கியுள்ளார்கள். இவர்களுக்குப் பாராளுமன்றக் கதவுகள் பூட்டப்படும். படித்த மதிப்புள்ளவர்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இந்த நாடு அரசியல் ஊழல் மோசடியால் பின்னடைவைக் கண்டுள்ளது. நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் பணியாற்றுவதற்கு அரசியல்வாதிகள் வேற்றுமைகளை மறந்து பொறுப்புடனும் கடமையுணர்வுடனும் செயற்பட வேண்டும் என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதியின் கூட்டத்திலிருந்து ஊடகவியலாளர்கள் வெளியேறினர்

(கொழும்பு)

சனாதிபதியின் கூட்டம் நடைபெற்ற பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பாதுகாப்புப் பணியில் நேற்று ஈடுபட்டிருந்த சனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினருக்கும் கூட்டத்திற்குச் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியாளர்களுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டு ஊடகவியலாளர் அனைவரும் அவ்விடத்தை விட்டு அகன்று சென்றனர்.

அப்பகுதிக்குச் சென்ற ஊடகவியலாளர்களில் பெரும்பாலானவர்கள் மண்டபத்திற்குச் செல்ல சனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் அனுமதி வழங்கவில்லை. சிலர் அனுமதிக்கப்பட்டபோதும் அவர்கள் மிகக் கடுமையான உடற்பரிசோதனையின் பின் அனுமதிக்கப்பட்டனர். சனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரின் இந்நடவடிக்கையைக் கடுமையாக எதிர்த்த ஊடகவியலாளர் அனைவரும் அவ்விடத்தைவிட்டு அகன்று சென்றனர்.

## இடைக்கால நிர்வாக வரைபை

# புலிகளிடம் அளிப்பது குறித்து பீரிஸ், மொறகொட முரண்பாடு!

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான முழுமையான வரைபை விடுதலைப் புலிகளுக்கு அனுப்புவது தொடர்பாக சிறிலங்காவின் அமைச்சர்களான ஜீ.எல் பீரிஸிற்கும், மிலிந்த மொறகொடவிற்குமிடையில் முரண்பாடு தோன்றியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முழுமையான வரைபை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி அவர்களின் விருப்பத்துடன் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டுமென அமைச்சர் பீரிஸ் விரும்புவதாகவும், முதலில் பேச்சுக்களை ஆரம்பித்து அதன் பின்னர் இடைக்கால நிர்வாக வரைபு குறித்து ஆராய வேண்டுமென அமைச்சர் மிலிந்த மொறகொட வற்புறுத்திவருகின்றார்.

இதனையடுத்தே இடைக்கால நிர்வாகசபை என்ற சொற்பதத்தைத் தவிர்த்து மாகாண நிர்வாகம் குறித்த கட்டமைப்பு ஒன்றையே அரசு தனது ஆலோசனையாகமுன்வைக்க விரும்புவதாகக்கூறப்படுகிறது.

இந்நிலையில் மேலோட்டமான மூலவரைபை முதலில் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்து, அவர்களின் விருப்பத்துடன் பேச்சை ஆரம்பித்த பின்னர் அந்த வரைபு தொடர்பாகஆராய்ந்து முடிவு செய்யலாமென அரசுகருதுவதாகவும் கூறப்படுகிறது.

அரசின் வரைபுடன் கடந்தவாரம் ஜோன் வெஸ்போக் வன்னிக்கு வருவார் என எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் அவர் வரைபின்றி வன்னிக்கு வந்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து வேறு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடிச் சென்றது தெரிந்ததே.

### 12 மாவீரர்களை...

...ள்ளது. வடமராட்சிப் பகுதியில் வல்வெட்டித்துறை நெடியங்காட்டுப் பகுதியில் இந்த 12 மாவீரர்களினதும் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வீதி வலமாக எடுத்துவரப்பட்டு அம்மன் கோவிலடியில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

நெடுந்தீவுக் கோட்டத்திலும் இப்பன்னிரு மாவீரர்களையும் நினைவு கூரும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றது. நேற்று முதல் நெடுந்தீவுப் பகுதியில் சோக கீதம் இசைக்கப்பட்டு இன்று நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெறுகின்றது.

இதேவேளை, யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளிலும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு சோக கீதங்கள் இசைக்கப்பட்டு இப்பன்னிரு மாவீரர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்படுகின்றது.

இதேவேளை, தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த லெப். கேணல் கதிரின் நினைவு நடுகல் இன்று காலை 10. 00 மணிக்கு கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் திரை நீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.

### திருமலையில்..

மருக்கும் அனுப்புவதாக முடிவு செய்துள்ளார்கள்.

இந்த அமைப்பினர் இன்று ஒரு ஹர்த்தாலையும் ஏற்பாடு செய்துள்ளார்கள். (25)

### பேச்சுவார்த்தைகள்..

விடயங்கள் விவாதிக்கப்பட்டு வருகிறது. தற்போது இது தவிர எதனையும் கூறமுடியாது என்றார்.

விடுதலைப்புலிகளை கடற்படையாக சிறிலங்கா அரசு ஏற்றுக்கொள்வது பற்றி அவரிடம் கேட்டபோது, கடற் போக்குவரத்து மற்றும் கடல் நடவடிக்கை குறித்து விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையே இணக்கப்பாடு ஏற்பட்டு வருகிறது. விடுதலைப்புலிகள் இது தொடர்பாக என்னிடம் தெரிவித்த கருத்தை அரச தரப்பினிடம் எடுத்துக் கூறுவேன் என்றார்.

படைச் சமநிலை குறித்து பத்திரிகையாளர் கேட்டபோது படைச்சமநிலை மிகவும் முக்கியமானதுடன் தற்போதைய பேச்சுவார்த்தைகளுக்கு அது அடிப்படையானதாகும் என்றார்.

எல்லைப் பிரச்சினை குறித்து கருத்துக் கூறிய கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன் எல்லைக்கட்டுப்பாட்டை நிர்ணயிப்பதில் பிரச்சினை இருக்கிறது. தற்போது கிழக்கு மாகாணத்தில் இப்பிரச்சினை அணுகப்பட்டு வருகிறது.

பேச்சுவார்த்தைகளுக்கு முன்பே எல்லை நிர்ணயம் குறித்து விடயங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஏ-9 பாதையூடாக கிளிநொச்சியை வந்தடைந்த இவர் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் மதியம் 12 மணி தொடக்கம் 1.45 மணிவரை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரைச் சந்தித்து உரையாடினார்.

இச்சந்திப்பில் இலங்கைக்கான யுத்தநிறுத்தக் கண்காணிப்பு குழுத் தலைவர் ரெலவ்சன் உள்ளடங்கிய குழுவினர் பங்குபற்றினர். இவ்வாறு வருகை தந்த மேற்படி குழுவினர் மூன்று நாட்கள் கிளிநொச்சியில் தங்கியிருந்து வன்னியின் பல இடங்களையும் பார்வையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (லோ)

# போதைவஸ்து பாவனை

சிறிலங்கா சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளில் நாற்பது வீதமானோர் போதை வஸ்து கடத்தல் மற்றும் பாவனையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியுள்ளார்.

இவர்களில் பெரும்பாலானோர் பாதாள உலகக்குழுக்களுடன் சம்பந்தப்பட்டுள்ளனர்.இவர்களினால் நாட்டின் சமாதானத்திற்கும் சமூக இஸ்திரத்தன்மைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த விசேட திட்டங்கள் போடப்பட்டுள்ளது. அமைச்சரவையிலும் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### அரசியல்...

வகையில் சிறிலங்கா சனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கதிர்காமர் அடுத்த மாத முற்பகுதியில் இந்தியாவிற்குச் செல்லவிருக்கின் றார்.

இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியாவை வருந்தி அழைப்பதில் பொ. ஐ. முன்னணி ஈடுபட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

### மட்டு.கல்முனைப்...

நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் தங்களுடன் ஆயுதங்களை வைத்திருந்தார்கள் என்பதால் ஊறுவிளைவிக்கும் ஆயுதங்களை வைத்திருந்த குற்றத்திற்காக இச்சட்டத்தின் கீழ் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்கள்.

இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக கண்காணிப்புக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டது. கண்காணிப்புக் குழு அவ்விடம் சென்றசமயம் இந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலத்த பாதுகாப்புடன் காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள. (25)

### வடபோர்முனைத்...

அத்துடன்வடபோர்முனையின் நாகர்கோயில், முகமாலை, கிளாலி போன்ற பகுதிகளையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு அதன் நிலைமைகள் தொடர்பாக அறிந்துள்ளதுடன் இப்பகுதிகளில் கடந்த யுத்த சூழ்நிலைகளால் மக்களின் பெருமளவானசொத்தக்கள்ள அழிக்கப்பட்டுள்ளமை பற்றியும் நேரடியாகப் பார்வையிட்டுள்ளார்.

இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் யாவற்றையும் தாம் கவனத்தில் எடுப்பதாக கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார் (லோ)

## - விபத்துக்கள் அதிகரிப்பை அடுத்து

# வீதிக் குறியீடுகளை அமைக்க கிளி. அரச அதிபர் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 வீதியில் அதிகரித்த வீதி விபத்துக்கள் ஏற்பட்டு வருவதை அடுத்து வீதிக்குறியீடுகள் அமைக்குமாறு கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏ-9 வீதி திறக்கப்பட்டதன் பின்னர் அதிக விபத்துக்கள் மற்றும் வாகனங்கள் குடைசாய்தல் என்பன ஏற்பட்டுள்ளன. இவற்றில் பல சரியான வீதிக் குறியீடுகள் இன்மையால் ஏற்பட்டவையாகும்.

வீதியில் சடுதியான பள்ளம் ஏற்பட்டுள்ளமை மற்றும் திடீர் திருப்பம், மேடுகள், சந்திகள், வளைவுகள் வேகக் கட்டுப்பாட்டு நடைமுறையை இனம்காட்டும் குறியீடுகள் என பல்வேறு வீதிக்குறியீடுகளையும் வீதியின் பக்கங்களில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தின் முன்னர் அமைத்து இலகுவானதும் பாதுகாப்பானதுமான வீதிப் போக்குவரத்தை உறுதி செய்ய உதவுமாறும் நேற்று கிளி. மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சுற்றாடல் அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் வைத்து வீதி அதிகார அபிவிருத்தி சபையிடம் மேற்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஏ-9 வீதி திறக்கப்பட்டு ஒரு வருடத்தை தாண்டிய போதும் வீதிக் குறியீடுகள் சரியாக அமைக்கப்படாமையால் அதிக வாகனங்கள் விபத்துக்குள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கது. (லோ)

# வைரஸ் தொற்றுக் காய்ச்சலினால் ஆந்திராவில் 100 குழந்தைகள் பலி!

(புதுடில்லி)

இந்தியாவின் ஆந்திராமாநிலத்தில் நூற்றுக்கும் அதிகமான குழந்தைகள் வைரஸ் தொற்றுக் காய்ச்சலுக்கு பலியாகியுள்ளனர்.

மேலும் நூறு குழந்தைகள் காய்ச்சல் காரணமாக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கரிம் நகர் மற்றும் வாறாங்கல் மாவட்டங்களில்தான் கூடுதலான உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

நலகுண்டா, அகமதாபாத், நெல்லூர்,கிருஷ்ணா ஆகிய மாவட்டங்களிலும் இந்த நோய் பரவியுள்ளது.

இந்த நோய்பரவக்காரணம் என்ன என்பதைக் கண்டறிய முடியவில்லை என மருத்துவமனை டாக்டர்கள் கூறியுள்ளனர்.

மூளைக்காய்ச்சல் கிருமியாக இருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

## - யாழ். மாவட்ட முன்பள்ளிகளில்-

# சுமார் $\frac{2}{3}$ பங்கு சிறார்கள் போசாக்கின்றியுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட முன்பள்ளிகளில் கல்வி பயிலும் 15478 சிறுவர்களும் 9296 சிறுவர்கள் போசாக் கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என முன்பள்ளி அபிவிருத்தி நிலையங்களை ஆய்வு செய்ததன் மூலம் தெரியவருகின்றது.

இது தொடர்பாக இந்த நிலையத்தின் ஆலோசகர் தெரிவிக்கையில், இவ்வாறான முன்பள்ளிச் சிறர்களுக்குப் போசாக்கு வழங்கக்கூடிய திட்டங்களை எந்த ஒரு அரச அரச சார்பற்ற நிறுவனங்களும் அமுல்படுத்தவில்லை. இந்தச் சிறார்களின் குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்து மீன்பிடி, விவசாயம்போன்ற தொழில்களைச் செய்ய முடியாமையே இதற்கான காரணமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பெரும் பாலான குடும்பங்கள் உழைக்கக்கூடிய குடும் பத்தலைவரை இழந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இதுவும் இதற்கானகாரணமாகவுள்ளது. (33)

# இல.தமிழர் 81000 பேர் இன்னமும் இந்.வில் அகதிகளாக உள்ளனர்!

கடந்த 20 வருடங்களாக இடம் பெயர்ந்து இந்தியாவில் 81000 பேருக்கு மேற்பட்டோர் இன்னமும் அகதிகளாக வாழ்கின்றார்கள். இவர்களில் நேற்று வரையும் 461 குடும்பங்களைச் சேர்ந்த 1539 பேர் யாழ்.குடாநாட்டுக் கடற்கரையை வந்தடைந்துள்ளனர் என யாழ். செயலகத்தில் குடிவரவுப் புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வருகின்றது. இந்த நிலையில் மண்டபம் அகதிமுகாமில் தாயகம் திரும்புவதற்காக பல அகதிகள் காத்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

இவ்வகதிகள் முற்றுமுழுதாகத் தாயகம் திரும்பும்போது யாழ். குடாநாட்டில் பாரிய இடப்பற்றாக் குறை தோன்றவுள்ளது. உள்நாட்டில் இடம்பெயர்ந்த அகதிகளே இன்னமும் தங்களது சொந்த இடங்களில் குடியேற முடியாது அகதி முகாங்களில் தங்கியிருக்கிறார்கள். இந்த நிலையில் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் அனைவரும் தாயகம் திரும்பினால் யாழ்.குடாநாடே பாரிய ஒரு இடநெருக்கடிக்குத் தள்ளப்படும். இந்த நிலையை அண்மையில் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (33)

### மாணவர்...

வாகனத்தின் சாவியை பலவந்தமாகக் கைப்பற்றிக் கொண்டு விசாரணைக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தினுள்ளே கொண்டு செல்ல முயற்சித்தனர். இதற்கு சர்வ தேசதமிழீழ மாணவர்பேரவை உறுப்பினர்கள் மறுத்துவிட்டனர். அவர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தி விசாரித்த பின்பே விடுவிக்க முடியும் எனப் பொலிசார் கூறினார்கள். அதற்குள் பல்கலைக்கழக மாணவர்களும், மக்களும் அங்கு கூடவே பலத்த வாக்குவாதங்களுக்குப் பின்னர் வாகனத்தின் சாவியை திருப்பிக் கொடுத்து அவர்களை விடுவித்தனர். பொங்குதமிழ் செயற்பாடுகளில் அவர்கள் தீவிரமாக செயற்பட்டது குறித்து அவர்களை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அங்கு வைத்து விரட்டியதும் குறிப்பிடத்தக்கது.

# நடமாடும் சேவை

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களை 'இக்ராட்' நிறுவனத்தில் பதிவு செய்வதற்காக இக்ராட் நிறுவன அதிகாரிகள் நாளை 9.00 காலை மணிக்கு கிளிநொச்சி செயலகத் திற்கு வருகை தரவுள்ளனர். எனவே முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒப்பந்தக்காரர்களையும் அன்றைய தினம் கிளிநொச்சி கச்சேரிக்கு வருகை தந்து இக்ராட் நிறுவனத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### லெப்.கேணல்..

வீரவணக்கம் செலுத்தப்பட்டு பொதுக் கூட்டமும் இடம்பெறும். பின்னர் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் இம்மாவீரரது திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு முழுமையான படைத்துறை மரியாதைகளுடன் உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.